REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மார்ச் 28 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 74 | Tuesday 28, March, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## வட, கிழக்கில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசின் திட்டமில்லை

### குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார் பிரதமர்



தமிழர் செறிந்து வாழும் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டமில்லையென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைத்தரப்பினராலும் தொல்பொருள் திணைக்களத்தினராலும் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் தொடர்பிலான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அரசாங்கத்தின் மீது 04

## அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு IMF முதல் கடனிலிருந்து பெற முடிவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசாங்க ஊழியர்களுக்கான மார்ச், ஏப்ரல் மாத சம்பளம், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியிலிருந்து ஒரு தொகையை பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ளதாக அமைச்சர் பந்துல 04

## சகல சுயாதீன ஆணைக்குழுக்களும் இரண்டு வாரத்துக்குள் நியமிக்கப்படும்

### சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சகல சுயாதீன ஆணைக்குழுக்களையும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நியமிப்பதற்கு எதிர்பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். ஆணைக்குழுக்களை நியமிப்பது நீண்டகாலமாக தாமதமடையும் நிலையில், அதற்காக சுமார் 2,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

சில நபர்கள் 09 ஆணைக்குழுக்களுக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதனால், பொருத்தமானவர் 04

## தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில்

# தரமற்ற உணவு வகைகளை விற்றால் சட்ட நடவடிக்கை

### நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கடும் எச்சரிக்கை

- பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை
- நாடு முழுவதும் திடீர் சுற்றிவளைப்பு, சோதனைகள் நடத்தவும் அதிகார சபை நடவடிக்கை

Consumer Affairs Authority
Ministry of Industry and Commerce

தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு மற்றும் தரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இவ்வாறான வர்த்தகர்களை அடையாளம் காண நாடு முழுவதும் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய உணவு மொத்த விற்பனை நிலையங்கள், களஞ்சியசாலைகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களை சோதனை செய்ய நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை 04

## குறைந்த வருமானம் பெறும் 29 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி

### கொழும்பிலிருந்து திட்டம் ஆரம்பம்



குறைந்த வருமானம் பெறும் 29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் வேலைத்திட்டம், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் (26) கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பமானது. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெமட்டகொட, நாரஹேன்பிட்டி மற்றும் வெள்ளவத்தை ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தி இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதன்படி, தெமட்டகொட, மிஹிதுசென்புர சனசமூக 04

## கொழும்பு பேராயரின் மனுவை பரிசீலிக்க நீதிமன்றம் தீர்மானம்

### மே மாதம் 09 ஆம் திகதி விசாரணை



கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, நடைமுறைப்படுத்தக் கோரி 04

## படையினர் வழிபாட்டுக்காகவே கச்சதீவில் சிறிய புத்தர் சிலை

### எக்காலத்திலும் எந்தவொரு விகாரையும் கட்டப்படமாட்டாது

இலங்கை கடற்படை உறுதிபட தெரிவிப்பு

(கே.அசோக்குமார்)

புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர, கச்சதீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை. எதிர்காலத்தில் எந்த ஒரு விகாரையையும் கட்ட கடற்படை முயற்சி செய்யாதென உறுதிபடத் தெரிவிப்பதாக கடற்படை கூறியுள்ளது. கச்சதீவின் பாதுகாப்புக்காக 04

## குருநாகலில் மூளைச்சாவடைந்த மாணவி

## 07 பேருக்கு உடல் உறுப்புகள் வழங்கி உயிர் காத்த பெருமிதம்



மூளைச்சாவடைந்த நோயாளரின் உடல் உறுப்புக்களை வேறு நோயாளர்களுக்கு பொருத்தும் வெற்றிகரமான சத்திர சிகிச்சைகள், வைத்தியத் துறையில் இடம்பெற்று வருகின்றன.

மூளைச்சாவடைந்த பாடசாலை மாணவி ஒருவரின் உடல் உறுப்புக்கள் 07 பேருக்கு பொருத்தப்பட்ட சம்பவம் நாட்டில் இடம்பெற்றுள்ளது. 04

## அரச ஊழியரின் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு கட்டுப்பாடு

### ஓரிரு தினங்களில் சுற்றறிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கவனத்திற் கொண்டு, அரசாங்க ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 04

## சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் கட்டுநாயக்காவில் தரையிறக்கம்

### வாரத்தில் 03 நாட்கள் சேவை




சிங்கப்பூர் ஏர் லைன்ஸின் போயிங் 787–10 ட்ரீம் லைனர் நேற்று அதிகாலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் முதன் முறையாக தரையிறங்கியது. 04

## வட மாகாண அபிவிருத்தி குழு இணைத் தலைவராக நியமனம்



வட மாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவராக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே, வட மாகாணத்திலுள்ள மன்னார் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராக அமைச்சர் காதர் மஸ்தானும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வவுனியா மாவட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் திலீபனும் நியமிக்கப்பட்டனர். 04

## இலங்கையில் நிதி மோசடி செய்த தம்பதியை நாடு கடத்த உத்தரவு

### தமிழகம் வேதாரண்யம் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையில் நிதி மோசடி செய்து தமிழகம் தப்பிச் சென்ற தம்பதியை நாடு கடத்த வேண்டுமென்றும் இலங்கைச் சிறைகளிலேயே அவர்கள் தண்டனைக் காலத்தை அனுபவிக்க வேண்டுமென்றும் வேதாரண்யம் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இலங்கையில் பெருந்தொகை பணத்தை மோசடி செய்து கொண்டு சட்டவிரோதமாக தமிழகத்திற்கு தப்பிச் சென்ற தம்பதிக்கு 04



### வசந்த முதலிகேயின் விடுதலைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு

ஏப்ரல் 03 இல் விசாரிக்க தீர்மானம் 02



### கச்சதீவில் புத்தர் சிலை விவகாரம் பா.ஜ.க உடன் தலையிட வேண்டும்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கோரிக்கை 02

## துனுசியா கடலில் படகு கவிழ்ந்து 28 பேர் பலி

### இத்தாலிக்குள் செல்ல முயன்றதாக தகவல்



துனுசியாவின் கடலோரப் பகுதியில் மத்திய தரைக்கடலைக் கடந்து இத்தாலிக்குச் செல்ல முயன்ற 28 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். 04

## தமிழக மீனவர்களின் படகுகள் மீட்பு மீனவர் பேச்சுவார்தையில் தீர்மானம்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)



இலங்கை அரசு கைப்பற்றியுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்திய மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர்களது படகுகளை மீட்பது குறித்து ஏப்ரல் முதல் வாரத்தில் மீனவர் குழுக்களின் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பா.ஜ.க நிகழ்ச்சியில் பங்கேற்க ஞாயிற்றுக்கிழமை மதுரை வந்த மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல். முருகன் 04

## பால்மாவின் விலைகள் நேற்று முதல் குறைப்பு

### உணவுப் பொதிகள் விலையும் குறையலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பால்மாவின் விலைகள் நேற்று முதல் குறைவடைந்துள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ பால் மா பக்கற்றின் விலையை 200 ரூபாவாலும் 400 கிராம் பால் மா பக்கற்றின் விலையை, 90 ரூபாவாலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக 04



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 மார்ச் 28 செவ்வாய்க்கிழமை

**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



### "இருக்கின்றவர் நானே"

(யோவான் 8: 21 – 30)

இயேசுவுக்கும் யூதர்களுக்கும் அவர்களது தலைமைகளுக்கும் இடையிலான காரசாரமான உரையாடல் தொடர்வதனை இன்றைய நற்செய்தி பறைசாற்றுகின்றது.

யூதர்கள் இயேசுவை மெசியாவாக மீட்பராக தந்தையால் அனுப்பட்டவராக கண்டு கொள்ளவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ மறுக்கின்றார்கள். அவர்மீது நம்பிக்கை கொள்வதில் பின்வாங்குகின்றார்கள்.

இயேசுவை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு இருக்கின்ற மிகமுக்கியமான பிரச்சினை யாதெனில் அவரை ஏற்றுக்கொண்டால் தங்களது இருப்புக்கும் தலைமைத்துவத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடும் என்கிற பயமாகும்.

ஏற்கனவே பெருமளவிலான மக்கள் அவரது போதனைகளாலும் வல்ல செயல்களாலும் கவரப்பட்டு அவரைப் பின்தொடரத் தொடங்கி விட்டார்கள். இந்நிலை நீடிக்குமானால் தங்களது நிலைமை பரிதாபமாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் அவரை நீக்கிவிடவே கங்கணம் கட்டியிருந்தார்கள்.

"இருக்கின்றவர் நானே"என்று யாவே தம்மை வெளிப்படுத்துவது விவிலியப் பண்பாகும் : எசாயா 43: 10 13). அவ்வாறே இயேசு தம்மை வெளிப்படுத்திய போதும் அவரை ஏற்றுக்கொள்ள அஞ்சுகின்றார்கள்.

இத்தவக் காலத்தில் நாம் எம்மைப் பற்றி சிந்திப்போம். இயேசுவே உண்மையான விடுதலை தருகின்ற இறைவன் என்று ஏற்றுக்கொள்வதில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் யாவை?

அன்றைய தலைவர்களைப் போன்று ஆணவம் தடுத்தால் மாறவேண்டிய தேவையுள்ளது என்பதை ஏற்று தவக்காலத்தில் மாற முயல்வோம்.

அருட்தந்தை நவாஜி...

## வருடாந்த மஹோற்சவம்





கொழும்பு, கொச்சிக்கடை அருள்மிகு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் ஆலய பிரதான தர்மகர்த்தா டி. எம். சுவாமிநாதன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மஹோற்சவ குரு சிவஸ்ரீ நாகேந்திர குருக்கள் கொடியேற்ற நிகழ்வை நடத்தி வைத்தார். நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.




## நோன்பும் அல்குர்ஆனும்

'மனிதர்களுக்கு நேர்வழியாகவும், நேர்வழியை விளக்கக்கூடியதாகவும், சத்தியம் அசத்தியத்தை பிரித்துக்காட்டகூடியதாகவும் விளங்கும் அல் குர்ஆன் ரமழான் மாதத்திலேயே அருளப்பட்டது' (பகரா 185) என்பது இறைவாக்காகும்.

அல்குர்ஆனின் பிரதான இலக்கு மனிதர்களுக்கு நேர்வழியை காட்டுவதே. எனவே அவன் அதனை விளங்கி செயல்பட வேண்டியுள்ளான். இது மனிதன் பயணிக்க வேண்டிய பாதையை வெளிச்சமிட்டு காட்டுகிறது. உள்ளத்தில் ஏற்படக்கூடிய உளநோய்களுக்கான மகத்தான நிவாரணியாக விளங்குகிறது. அறிவுக்கண்களை அகலத்திறந்து விடுகிறது. நாகரிகத்தையும் கலாசாரத்தையும் கற்பிக்கிறது. உயிரோட்டமானது. சூழ இருப்பவற்றை உயிர்ப்பிக்கக்கூடியது. மனிதனை அனைத்து தீங்குகளில் இருந்தும் பாதுகாக்கிறது. மகிழ்ச்சியின்பால் மனிதகுலத்தையே இட்டுச்செல்கிறது. இதனை நாடிநின்றவர்களை இது ஒரு போதும் கைவிட்டதில்லை.

எனவேதான், அல்லாஹ் 'நீங்கள் அல் குர்ஆனை நுணுக்கமாக ஆராயக்கூடாதா? அல்லது அப்படி விளங்க முடியாத பிரகாரம் உங்களது உள்ளங்கள் தாழிடப்பட்டுள்ளனவா'? (முஹம்மத் 24) என்றும் 'அவர்கள் அல்குர்ஆனை விளங்க வேண்டும் என்பதற்காக அதனை நாம் இலகுபடுத்தினோம். அதனை விளங்க முனைபவர்கள் இருக்கிறார்களா'? (கமர் 17) என்றும் கேட்கிறான்.

அல்குர்ஆனில் ஆழமான விளக்கமுடைய இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் 'எமக்கு அல்குர்ஆனை மனனம் செய்வது கஷ்டமானதாகவும் அதன்படி செயல்படுவது இலகுவானதாகவும் அமைந்திருந்தது. ஆனால் எமக்கு பின்னால் வந்தவர்களுக்கு அதனை மனனம் செய்வது இலகுவானதாகவும் அதன்படி செயல்படுவது கஷ்டமானதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் 'கருத்துக்களை விளங்காது எழுத்துக்களை மனனம் செய்வது மாத்திரம் அல்லது 'நான் அல்குர்ஆனை ஓதினேன் என்று கூறும் ஒருவனிடம் அதன் பண்பாட்டையோ செயல்பாட்டையோ காணாது விட்டால் அது அல்குர்ஆனுக்கு செய்யவேண்டிய கடமையை செய்துவிட்டது ஆகாது' என்றுள்ளார்.

ஆகவே அல்குர்ஆனை ஓதுவதிலும் அதனை விளங்குவதிலும் அதற்கேற்ப வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்துவோம்.

அஷ்ஷெய்க
யூ.கே. ரமீஸ் எம்.ஏ
(சமூகவியல்)...

## 20 நாட்களில் 75,000 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை

நாட்டுக்கு கடந்த 20 நாட்களில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 75 ஆயிரத்தை கடந்துள்ளது. மார்ச் மாதத்தின் கடந்த 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 76 ஆயிரத்து 247 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப்பயணிகளின் மொத்த எண்ணிக்கை 02 இலட்சத்து 86 ஆயிரத்து 431 பேரென குறிப்பிடப்படுகின்றது.

அதில், 16 ஆயிரத்து 588 பேர் ரஷ்ய சுற்றுலாப்பயணிகள் என்பதுடன், ஏனையவர்கள் இந்தியா, ஜேர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து இலங்கை வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## சிவப்பு சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடையை நீக்கவும்

### உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சிவப்புச் சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடையை நீக்குமாறு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் அரசாங்கத்ததைக் கேட்டுள்ளது.

சட்டவிரோதமாக நாட்டிற்கு சிவப்பு சீனியை இறக்குமதி செய்வதை நிறுத்த முடியாவிட்டால் சிவப்பு சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அந்த சங்கம் அரசாங்கத்தை கேட்டுள்ளது. அவ்வாறு இன்று சிவப்பு சீனியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு என்றும் அந்த சங்கத்தின் தலைவர் பெரகும் அபேசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய சீனி உற்பத்தித் துறையை பாதுகாக்கும் வகையில் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவிலிருந்து சிவப்பு சீனி இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது.

எனினும் சட்டபூர்வமற்ற விதத்தில் நாட்டுக்குள் பெரும் தொகை சிவப்பு சீனி கொண்டுவரப்படுவதுடன் அதிக விலைக்கு அது விற்பனை செய்யப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சந்தையில் வெள்ளைச் சீனி ஒரு கிலோ 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், சிவப்புச் சீனி ஒரு கிலோ 400 ரூபாவுக்கு 04

## சர்வதேச நாணய நிதியத்திடம் மீள செல்லாத வகையில் பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்

சர்வதேச நாணய நிதியத்திடம் மீண்டும் செல்லாத வகையில் எமது பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதுவே எம் முன்னிருக்கும் சவாலாகும் என தெரிவித்துள்ள அமைச்சர், கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் எமது பொருளாதாரத்தை சிறப்பாக முகாமைத்துவம் செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

வறிய மக்களுக்கு வழங்கிவைப்பதற்காக சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளை விநியோகிக்கும் ஆரம்ப நிகழ்வு கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெற்றுக்கொள்ள இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பரிஸ் சமூகம் உட்பட உலக நாடுகள் எமக்கு உதவியாக இருந்தன

இந்த உதவி கிடைத்த பின்னர் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால், ஜனரஞ்சகமற்ற தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படுகிறது.

நாம் சர்வதேச நாணய நிதியத்துக்கு 16தடவைகள் சென்றிருக்கின்றோம். தற்போது 17ஆவது தடவையாகவே சென்றிருக்கின்றோம்.

அதனால் இதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லாத வகையில் எமது பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்து கொள்ளவேண்டும்.

இதுதான் எம் முன்னிருக்கும் சவாலாகும். அந்த சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடியும்.

1991இல் இந்தியாவும் இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி இருந்தது. எனினும் அவர்கள் கட்சி, நிறம் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ததன் மூலம் அந்த நெருக்கடியில் இருந்து இந்தியா மீள முடிந்தது.

அதனால் நாம் அரசியல் கட்சி பேதங்களை மறந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்பட்டால் எம்மாலும் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்துகொள்ள முடியும்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை தொடர்ந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றன. அதேபோல் பல்வேறு நாடுகள் எமக்கு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியின் மூலம் இலங்கை வங்குராத்தேத்து என்ற அந்த அடையாளத்தை எமக்கு நீக்கிக்கொள்ள முடிந்துள்ளது என்றே நான் நினைக்கிறேன்.

இது ஆரம்பமாகும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது பொருளாதாரத்தை 04

## தங்கத்தின் விலை மேலும் குறைகிறது

தங்கத்தின் விலை மேலும் குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று (27) காலை கொழும்பு செட்டியார் தெரு, தங்கச் சந்தையில் "22 கரட்" பவுண் தங்கத்தின் விலை 1,58,300 ரூபாவாக பதிவாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 1,61,000 ரூபாவாக காணப்பட்ட "22 கரட்" ஒரு பவுண் தங்கத்தின் விலை 2,700 ரூபாவாக குறைந்துள்ளது.

இதனிடையே வெள்ளிக்கிழமை 1,75,000 ரூபாவாக இருந்த "24 கரட்" ஒரு பவுண் தங்கம், நேற்று 1,72,000 ரூபாவாக குறைவடைந்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு தங்கச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கச்சத்தீவில் புத்தர் சிலை விவகாரம்; பா.ஜ.க உடன் தலையிட வேண்டும்

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கோரிக்கை

கச்சத்தீவில் புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக பா.ஜ.க அரசு உடனடியாக தலையிட்டு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவுக்கு சொந்தமான கச்சத்தீவு 1975 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஒப்பந்தம் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது.

285 ஏக்கர் நிலப்பரப்புள்ள கச்சத்தீவில் புனித அந்தோனியார் ஆலயம் உள்ளது. இத் திருவிழாவை யாழ்ப்பாணம் மறைமாவட்டமும் தமிழ் நாடுஇராமநாதபுரம் மறை மாவட்டமும் இணைந்து நடத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் இரு நாட்டு மீனவர்கள் தங்கி வலைகளை காய வைக்கவும், ஓய்வெடுக்கவும் ஒப்பந்தம் அனுமதித்துள்ளது.



ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமே கச்சதீவில் எந்த கட்டுமானப்பணிகளையும் இரு நாடுகளுமே செய்யக்கூடாது என்பதுதான். ஆனால், அந்த ஒப்பந்தத்தை மீறி, புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. எனவே இது ஒப்பந்தத்தை மீறுவதாகும். எனவே பா.ஜ.க அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

## வசந்த முதலிகேயின் விடுதலைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு

### ஏப்ரல் 03இல், விசாரிக்க தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களின் இணைப்புச் செயலாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்தமைக்கு எதிராக, சட்டா மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டை எதிர்வரும் ஏப்ரல (03) விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மேன்முறையீடு தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதன்போதே (03) விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் நேற்று மேல்நீதிமன்ற பதிவாளர் அது தொடர்பில் தெரிவிக்கும் போது, மேல் நீதிமன்ற நீதிபதி நேற்றைய தினம் விடுமுறை பெற்றிருந்ததால் அந்த மேன்முறையீடு தொடர்பான விசாரணை 03ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மேற்படி மனு மீதான விசாரணைகள் இடம்பெற்ற போதே, பிரதிவாதியான வசந்த முதலிகே நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். 04

## துபாய் 'ஜிலே'யின் போதைப்பொருள் வலையமைப்பு கண்டுபிடிப்பு

### 10 இலட்சம் பெறுமதியான போதைப் பொருள், பணத்துடன் ஒருவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

துபாயில் மறைந்து வாழ்ந்து வரும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகரான 'ஜிலே' என்பவரின் இலங்கையில் உள்ள போதைப் பொருள் வலையமைப்பை முன்னெடுத்து வரும் நபர், நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவரிடமிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்களையும் பெருமளவு பணத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் விடுமுறை விடுதி ஒன்றின் முகாமையாளராக பணிபுரிந்து வரும் நிலையிலேயே, இந்த போதைப்பொருள் வர்த்தகத்தையும் முன்னெடுத்து வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அந்நபரிடமிருந்து ஹேஸ் ரக போதைப் பொருள், 04

## கடல் வளங்கள், கடற்பரப்புக்கள் வெளிநாடுகளுக்கு வழங்கப்படாது

### வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை

இலங்கையின் கடல் வளங்களையோ கடற்பரப்புக்களையோ, சட்டத்துக்கு புறம்பாக எந்த நாட்டுக்கும் வழங்குவதை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முற்றாக விரும்பவில்லையென கட்சியின் செயலாளரும் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் திட்டவட்டமாக நேற்று தெரிவித்தார்.

இழுவைமடி தொழிலுக்கோ கடலட்டைப் பண்ணைகளுக்கோ எமது கடல் வளத்தை, இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். யாழ் ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் கடற்றொழில் அமைச்சருக்கு எதிராக பல்வேறுபட்ட கருத்துக்களும் போராட்டங்களும் ஒரு சிலரால் அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறான ஒரு சம்பவம் அண்மையில் மன்னார் மாவட்டத்திலும் இடம்பெற்றுள்ளது. இதில் கடலட்டை பண்ணைகள் அனுமதியின்றி மேற்கொள்ளப்படுவதாகவும் இதானால் கடற்றொழிலுக்கு பாதிப்புகள் உருவாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடலட்டை பண்ணைகள் ஒவ்வொன்றும் 04



# 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் விற்பனைக்கு அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் எரிபொருள் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியை மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எரிசக்தி, மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது ட்விட்டர் பதிவின் மூலம் அந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் சீனாவின் சினோ பெக் நிறுவனம், அவுஸ்திரேலியாவின் யுனைடெட் பெட்ரோலியம் நிறுவனம், மற்றும் அமெரிக்காவின் ஆர் .எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கே இலங்கையில் எரிபொருள் விற்பனை சந்தையில் பிரவேசிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்கள்

# வருடாந்த அறிக்கையை தாமதமின்றி பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரும்பாலானஅமைச்சின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்கள் தமது வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கிணங்க அனைத்து அமைச்சுக்களின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்கள் தமது வருடாந்த அறிக்கையை விரைவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள்,மாகாண சபைகள் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பெரும்பாலான அரச நிறுவனங்கள் தமது வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு வழங்கத் தவறிவிட்டன என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர். அதனையடுத்தே பிரதமர் மேற்படி பணிப்புரையை வழங்கியுள்ளார்.

இவ்வாறு அரச நிறுவனங்களின் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு தாமதம் இன்றி பெற்றுக் கொடுக்க வேண்டியது அந்த நிறுவனத் தலைவர்களினும் அமைச்சின் செயலாளர்களினதும் பொறுப்பாகும் என்றும் இதன் போது பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தேசிய லொத்தர் சபை / National Lotteries Board**

ஞாயிற்றுக்கிழமை 2022.03.26 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5071 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,712,550.00 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 5 8 7 4 7 8

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு இலக்கம் 380 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,587,296.80 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 01 20 36 52 — விசேட இலக்கினம் சிம்மம்

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1526 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,314,408.40 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 0 4 7 1 0 5

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் 3313 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,222,823.60 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 25 43 47 62

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1419 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 310,814,734.00 — ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 06 16 48 79 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1101 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,166,224.40 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 17 33 56 63

### காணி சுவீகரிப்புச் சட்டம் (அத்தியாயம் 460) பிரிவு 7இன் கீழான அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்படும் காணியானது அரசுடமையாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக 2310/08 மற்றும் 2022.12.12 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**அட்டவணை**

- மாகாணம் :தென் மாகாணம்
- மாவட்டம் :காலி
- பிரதேச செயலாளர் காரியாலயம் :கடவத்சத்தர - காலி
- கிராம சேவகர் பிரிவு :இலக்கம் 101C, தேத்துகொடை வடக்கு
- கிராமத்தின் பெயர் :தேத்துகொடை வடக்கு
- காணியின் பெயர் :கடகுட்டி வயல் தோட்டம்
- திட்டமிடல் இலக்கம் :அடிப்படை வரைபட இல. 810022இன் வலயம் 01 இன் வடிவம் 01
- துண்டுகளின் எண்ணிக்கை 77 :திட்டமிடல் இல அடிப்படை வரைபடம் 810022 இன் வலயம் 01இன் வடிவம் 03இன் துண்டு இல. 168,169 மற்றும் 170 திட்டமிடல் இல அடிப்படை வரைபடம் இல 810022 இன் வலயம் 01இன் வடிவம் 04இன் துண்டு இல. 171,172 மற்றும் 173

**ஐ.எம். சமரகோன்,**
**பிரதேச செயலாளர்,**
**காலி - கடவத்சத்தர.**

2022.12.05ஆம் திகதி
**கடவத்சத்தர பிரதேச செயலகத்தில்**

# அறிவித்தல்

### புளு ஸ்டார் ரியாலிட்டீஸ் (பிறைவெட்) லிமிடெட்

### கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு

இலங்கை சட்டத்தின் முதலீட்டு சபையின் 17ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றான புளு ஸ்டார் ரியாலிட்டீஸ் (பிறைவெட்) லிமிடெட்டின் பங்குதாரர்கள் நிறுவனத்தில் தமது பங்குகளை குறைப்பதற்கு விருப்பத்தை வெளியிட்டிருப்பதோடு 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூறப்பட்ட மூலதனத்தை குறைக்க நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அதன்படி;

2007இன் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 59ஆவது பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைய முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,001,500,000.00 இனை நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் 100,150,000.00 முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 200,600,000 ஆக குறைக்கப்பட்டிருப்பதை பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு புளு ஸ்டார் ரியாலிட்டீஸ் (பிறைவெட்) லிமிடெட் (நிறுவனம்) பணிப்பாளர் சபை தீர்மானித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

மேற்கூறிய குறைப்பு வழங்கப்பட்ட மற்றும் முழுமையாக செலுத்தப்பட்ட நிறுவனத்தின் சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது ரூபா 901,350,000.00/- அளவுக்கு அதன் கூறப்பட்ட மூலதனத்திற்கு எதிராக பணம் செலுத்துவதால் செயற்படுத்தப்படும்.

கூறப்பட்ட மூலதனத்தில் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக சிறப்புத் தீர்மானம் ஒன்றுக்கு பங்குதாரர்களின் ஒப்புதலை பெற 60 நாட்கள் முன்னறிவித்தலுடன் நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படும்.

**அஸைன்மன்ட் (பிறைவெட்) லிமிடெட்**
**புளு ஸ்டார் ரியாலிட்டீஸ் (பிறைவெட்) லிமிடெட் செயலாளர்கள்**
**இல. 200/1/1, பார்க் ஒழுங்கை,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.**
2023.03.28

### பெயர் மாற்றம்

நிந்தவூர்-17, ஆலீம் வீதியில் வசித்து வரும் (அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த) **சந்திரமோகன் லனுஷாயினி** ஆகிய நான், 2022.03.02ந் திகதியிலிருந்து எனது சுயவிருப்பின் பேரில் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்று எனது பெயரை **சந்திரமோகன் பாத்திமா நுஹா** என மாற்றிக் கொண்டேன் என்றும் இனிமேல் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்தி ஒப்பமிடுவேன் என்றும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**சந்திரமோகன் பாத்திமா நுஹா**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

### தேசிய சம்பள ஆணைக்குழு

## 2023/03/31 ஆம் திகதிக்கு நடவடிக்கைகளை நிறைவு செய்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பின் 33ஆவது சட்டத்தில் கௌரவ சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய நிறுவப்பட்ட தேசிய சம்பள ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் செயற்பாடுகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைப்பதற்கு கௌரவ சனாதிபதி அவர்கள் உத்தேசிப்பதன் காரணத்தால், இந்த ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் 2023 மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்படுகிறது என்பதை கௌரவ சனாதிபதி அவர்களின் உத்தரவுக்கு அமைய சனாதிபதி செயலாளரின் பீஎஸ்/பீஎஸ்ஏ/00/9/6/1/10 மற்றும் 2023/03/02 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் மூலம் சனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் பணிகள் மற்றும் செயற்பாடுகள் மேல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு கீழுள்ளவாறு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

அமைச்சு, திணைக்களங்கள் சார்ந்த சேவை விதிகள்/ ஆட்சேர்ப்பு நடைமுறை, சம்பளம் மற்றும் கொடுப்பனவு சார்ந்த செயற்பாடுகள் அரச நிருவாக அமைச்சின் நிறுவன பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல்.

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளின் ஊழியர் எண்ணிக்கை சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கூட்டுத்தாபன சட்டரீதியான சபைகள் சார்ந்த ஊழியர் எண்ணிக்கை மற்றும் மறுசீரமைத்தல், ஆட்சேர்ப்பு நடைமுறை, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான செயற்பாடுகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைத்தல்.

இந்தப் பணிகள் மற்றும் செயற்பாடுகள் தவிர இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகள் தேசிய சம்பள ஆணைக்குழுவின் முடிவுகள் அடிப்படையில் கீழுள்ளவாறு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என மேலும் அறியத்தருகிறோம்.

ஓய்வூதியம் சார்ந்து சம்பளம் தொடர்பிலான பரிந்துரைகள் பெற்றுக்கொடுத்தல் அரச நிருவாக அமைச்சின் ஓய்வூதிய பிரிவுக்கு இட்டுச்செல்லல்.

மாகாண சபைகள் சார்ந்த சேவை விதிகள்/ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளம் தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்த நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவதற்கு சனாதிபதி அலுவலகத்திற்கு இட்டுச்செல்லல்.

புதிய தேசிய சம்பள கொள்கையை தயாரிப்பது சார்ந்த இதுவரை இந்த ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எதிர்காலப் செயற்பாடுகளை செய்வதற்காக நிதி அமைச்சுக்கு இட்டுச்செல்லல்.

**சந்திராணி சேனாரத்ன**
**செயலாளர்,**
**தேசிய சம்பள ஆணைக்குழு**

### சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்பு பணிமனை)**
**பொதுக் கேள்வி 4468T**
**SUPPLY OF GATE VALVES, BALL VALVES ETC….**

விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களின் வழங்கலுக்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அல்லது கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்டுள்ள காசாளர் ஒருவருக்கு விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**www.ceypetco.gov.lk & www.dqmarket.com** ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2023 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

### சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்பு பணிமனை)**
**பொதுக் கேள்வி 4461T**
**SUPPLY OF SEAMLESS TUBE**

விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களின் வழங்கலுக்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், வெளிநாட்டிலுள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) ஆகியோரிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அல்லது கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்டுள்ள காசாளர் ஒருவருக்கு விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**www.ceypetco.gov.lk & www.dqmarket.com** ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2023 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

## விலைமனுக்களை சமர்ப்பிக்கும் காலப்பகுதிக்கான நீடிப்பு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**SUPPLY OF TYPRE REBUILDING & PRE-CURING SERVICES TO SRI LANKA TRANSPORT (SLTB) REGIONS FOR 04 MONTHS**
**Procurement No.: MT/04/09/CT/521 (2022)**

மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் காலப்பகுதியானது 2023.04.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென வளமுள்ள விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். 2023.04.03 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஏற்புடையதான பிராந்தியத்திற்கு / பிராந்தியங்களுக்கு உரித்தான மீளளிக்கப்படாத விலைமனு கட்டணம் / கட்டணங்களைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவின் முகாமையாளரினால் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும் (தொலைபேசி: 011 7706110, பிரதான பெறுகை 0771056204 தொலைபேசி / தொலைநகல்: 011 2588457)

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**07ஆம் மாடி, "செத்சிரிபாய",**
**II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

# INVITATION FOR BIDS (IFB)

## CHAVAKACHCHERI PRADESHIYA SABHA, JAFFNA, NORTHERN PROVINCE

### MINISTRY OF PUBLIC ADMINISTRATION, HOME AFFAIRS, PROVINCIAL COUNCILS AND LOCAL GOVERNMENT

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this grant to payments under the Contract for the works mentioned in the table below.
2) The Chairman, Procurement Committee (LAPC) on behalf of the Chavakachcheri Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the works mentioned in the table below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs.Mn) | Required Min. CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/CHAVA.PS/2021/01(B) | Construction of Shopping Unit at Kaithady South (Balance Work) | 13.74 | C6/C5 Building Construction | 90 | 200,000.00 | 12.07.2023 | 09.08.2023 |

3) Bidding will be conducted through National Competitive Bidding procedure.
4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.
6) Interested bidders may obtain further information from **Chairman (LAPC), Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam**, (T.P No: 0212050356, Fax No: 0212050348) and inspect the bidding documents at the address given below from **29th March 2023** until **26th April 2023** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.
7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam** from **29th March 2023** until **26th April 2023** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Three Thousand Five Hundred Rupees (Rs.3,500.00)**. The method of payment will be by cash.
8) Bids shall be delivered in duplicate to the address below at **"Chairman, Procurement Committee (LAPC), Local Development Support Project, Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam"** at or before 14.00 Hrs on **27th April 2023**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9) A pre-bid meeting will be held on **12th April 2023 at Chavakachcheri Pradeshiya Sabha, A9 Road, Kodikamam.**

**Chairman,**
**Procurement Committee (LAPC),**
**Local Development Support Project,**
**Chavakachcheri Pradeshiya Sabha,**
**Kodikamam.**

28.03.2023

## சிவப்பு சீனிக்கு... 02ஆம் பக்கத் தொடர்

அண்மித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.அவ்வாறு விற்பனை செய்யப்படும் சீனி அனைத்தும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதல்ல. சட்ட பூர்வமற்ற விதத்தில் அவை இறக்குமதி செய்யப்படுவதாகும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையை கருத்திற் கொண்டு சிவப்பு சீனி இறக்குமதி க்கான தடையை நீக்குமாறும் அவர் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

## சர்வதேச... 02ஆம் பக்கத் தொடர்

முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுத்தால் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டி ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துபாய் ... 02ஆம் பக்கத் தொடர்

மற்றும் ஐஸ் ரக போதைப் பொருளுடன் போதைப் பொருள் வர்த்தககத்தின் மூலம் சம்பாதித்துள்ள 6 லட்சத்து 12 ஆயிரத்து 430 ரூப பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துபாயில் மறைந்து வாழும் ஜிலே என்ற போதைப் பொருள் வர்த்தகரின் சகோதரரின் விடுமுறை விடுதியிலேயே, மேற்படி நபர் முகாமையாளராக பணிபுரிந்து வருவதாக விசாரணைகளிலி ருந்து தெரியவந்துள்ளதாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மிருக சந்தையில் இருந்தே கோவிட் – 19 வைரஸ் மனிதனுக்கு தொற்றியது

## புதிய ஆய்வில் வெளியான தகவல்கள்

சீனாவின் வூஹான் நகர மிருக சந்தையில் இருந்தே கோவிட் 19 வைரஸ் மனிதனுக்கு தொற்றியதா அல்லது அந்நகர ஆய்வு கூடத்தில் இருந்து வெளியே கசிந்ததால் தொற்று ஏற்பட்டதா என்ற ஆய்வில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டுள்ளது.

வூஹான் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ரக்கூன் நாய்கள் மூலம் வைரஸ் பரவியிருக்கலாம் என்றும் இவ் வைரசின் கூறுகள் இந்நாய்களிடம் காணப்பட்டதற்கான ஆதாரம் கிட்டியுள்ளதாகவும் இங்கு ஆய்வு நடத்தியுள்ள ஒரு சர்வதேச வைரஸ் நிபுணர்கள் குழுவொன்று கண்டு பிடித்துள்ளது என்று அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'த அட்லான்டிக்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லூசியானா மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைரஸ் நிபுணரன ஜெரமி காமில், வூஹான் மிருக சந்தையில் இருந்தே இவ்வைரஸ் மனிதனுக்கும் பரவியிருக்க வேண்டும் என்பதை நிரூபிப்பதற்கான மரபணு மாதிரிகள் கிடைத்திருப்பதாக கூறியுள்ளதோடு ஆய்வு கூட கசிவு என்ற அனுமானத்தை அவர் ஏற்கவுமில்லை.

எனினும் ரக்கூன் நாய்களிடம் இந்த வைரஸ் காணப்பட்டதற்கான ஆதாரங்கள் இருந்தாலும் இந்த வைரஸ் எங்கிருந்து இந்நாய்களிடம் வந்திருக்கக் கூடும் என்பதும் இச்சந்தைக்கு வந்திருக்கக் கூடிய மனிதர்களிடமிருந்தா என்பது தெரியவில்லை என்றும் இந்த ஆய்வு தெரிவித்திருப்பதாக அறிய முடிகிறது. மேலும் 2020 ஆம் ஆண்டில் அச்சந்தையில் வைக்கப்பட்டிருந்த எந்தவொரு மிருகமும் கோவிட் தொற்றினால் பீடிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் மனிதரிடம் மட்டுமே தொற்று அறிகுறிகள் தென்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. சீன ஆய்வாளர்கள் போதிய அளவு தகவல்களைத் தருவதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

# கோவிட் தொற்றினால் உலகெங்கும் உள்ள மாற்றுத் திறனாளிகள் பெரிதும் பாதிப்பு

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சாட்சியம்

கோவிட் தொற்றினால் உலகெங்கும் உள்ள மாற்றுத் திறனாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் உணவும் மருத்துமின்றி மரணிக்க வேண்டியிருந்தது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 52வது பொது விவாதத்தில் சாட்சியமளித்த இந்தியாவின் சமார்த்தானம் டிரஸ்ட் தெரிவித்துள்ளது. இவ்வகையில் இந்திய மத்திய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் காப்பாற்றப்பட்டதாகவும் இச் சாட்சியத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தொற்றினால் பீடிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் உணவு, மருத்துவ வசதியின்றி தவித்தனர். தனிமையில் விடப்பட்டனர். நிறுவனங்கள் ஆள்குறைப்பு செய்தபோது இவர்களே முதலில் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். உணவும், கவனிப்பும், மருத்துவ வசதியுமின்றி பலர் மரணத்தைத் தழுவினர். வயதில் குறைந்த மற்றும் வயதான மாற்றுத்தினாளிகளே பெரிதும பாதிக்கப்பட்டனர். தொற்றுக்கு பிற்பட்ட காலத்தில் இவர்களது நிலை இன்னும் மோசமானது. வேலைவாய்ப்புகளுக்காக பலர் வெளியிடங்களுக்கு குடிபெயர்ந்த போது மாற்றுத் திறனாளிகள் உள்ளூரிலேயே தங்கி கஷ்டப்பட வேண்டியிருந்தது என்று இச் சாட்சியத்தில் சமூக அமைப்புகள் தெரிவித்திருந்தன.

## வட, கிழக்கில் பௌத்த...

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழரின் மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களை அழிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். தமிழரின் மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள கருத்துக்கள் தொடர்பில் அமைச்சு அதிக கவனம் செலுத்துமெனவும் அவர் கூறியுள்ளார்.

## வசந்த முதலிகேயின் விடுதலைக்கு... 02ஆம் பக்கத் தொடர்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வசந்த முதலிகே தொடர்பில் போதிய சாட்சிகள் இல்லையெனத் தெரிவித்து, கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதவான் வசந்த முதலிகேயை விடுதலை செய்திருந்தார்.

அவ்வாறு விடுதலை செய்வதற்கு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதவான் மேற்கொண்ட தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என தீர்மானித்து,அதனை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி சட்டமா அதிபரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடல் வளங்கள், கடற்பரப்புக்கள்... 02ஆம் பக்கத் தொடர்

நாரா மற்றும் நெக்டா நிறுவனங்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இத்தொழில் முயற்சியை முன்னெடுப்பவர்கள் பொருளாதார ரீதியில் வளர்ந்துவிடக் கூடாதென்றும் வடக்கின் அபிவிருத்தியில் கடற்றொழில் அமைச்சரின் வகிபாகம் இருந்துவிடக் கூடாதென்றும் எண்ணுகின்றனர். இவர்கள், வெளிநாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கருத்துக்களை முன்வைக்கின்றனர். இது வடக்கின் கடற்றொழிலாளர்களுக்கு நன்கு தெரியும். இதேநேரம் தற்போது அதிகளவான கடற்பண்ணைகளை அமைப்பதற்கான அனுமதியை கடற்றொழிலாளர்கள் கோரிவருகின்றனர். இதிலிருந்து, எதற்காக போராட்டங்களை முன்னெடுக்கின்றனர் என்பதையும் உண்மை புலனாகிறது. நாம், குறுகிய தரப்பினரது சுயலாப தேவைக்கான எதிர்ப்புகளுக்கோ, ஆர்ப்பாட்டங்களுக்கோ அடிபணிந்து கடற் பண்ணைகளுக்கான முறையாக அனுமதி வழங்குவதை நிறுத்திவிடப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## படையினர் வழிபாட்டுக்காகவே...

முகாமிட்டுள்ள பௌத்த கடற்படையினர் தங்களின் வழிபாட்டுக்காக தங்களது முகாமுக்கு முன்பாக சிறிய புத்தர் சிலையை வைத்து வணங்கி வருகின்றனர். எனினும் கச்சதீவில் எந்த ஒரு விகாரையையும் கட்ட கடற்படை முயற்சி செய்யாதென்றும் இலங்கை கடற்படை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கும் பௌத்த மயமாக்கல் இடம்பெறுவதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.இது தொடர்பில் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கெப்டன் கயான் விக்கிரமசூரியவிடம் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். குடாநாட்டின் நிலப்பரப்பிலிருந்து சுமார் 50 கடல் மைல் தொலைவில் மக்கள் வசிக்காத தீவொன்றே கச்சதீவாகும்.

அப்பகுதியின் பாதுகாப்புக்காக கடற்படைக் குழுவொன்று அங்கு நிலைகொண்டுள்ளது. அங்குள்ள பாதுகாப்பு கடமைகளுக்கு மேலதிகமாக, இலங்கை கடற்படையின் பௌத்த சங்கத்தின் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தையும் அவர்கள் பாதுகாத்து வருகின்றனர்.

புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த பெருவிழாவைத் தவிர, இந்த தேவாலயம் தினமும் சுத்தம் செய்யப்பட்டு, விளக்குகள் ஏற்றப்பட்டு, மிகுந்த பக்தியுடன் அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினர்களால் பராமரிக்கப்பட்டும் வருகிறது.

அங்கு நிலைகொண்டுள்ள கடற்படை அணியில் பணிபுரியும் கடற்படையினரில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள் என்பதால், அவர்களின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக, ஒரு சிறிய புத்தர் சிலை கடற்படையின் இல்லத்துக்கருகில் வைக்கப்பட்டு அவர்கள் வழிபாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த தேவாலயத்தைத் தவிர, இந்த தீவில் வேறு எந்த நிரந்தர கட்டடங்களும் நிர்மாணிக்க முடியாது. கடற்படையினர் தற்காலிகமாக கட்டப்பட்ட இராணுவ முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனரென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 07 பேருக்கு உடல்...

குருநாகல், மலியதேவ மகளிர் கல்லூரியில் உயர்தரம் பயிலும் 19 வயது விஹங்கனா ஆரியசிங்க என்ற யுவதி திடீர் உடல் நலக்குறைவால் மூளைச் சாவடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் மாணவியின் உடல் உறுப்புக்கள் இவ்வாறு வேறு நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

குருணாகல், அம்பன்பொல நகரில் வசிக்கும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் விஹங்கனா ஆரியசிங்க இளைய பிள்ளையாக பிறந்தார்.

அவருக்கு ஒரு மூத்த சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைந்த விஹங்கனா, குருணாகல் மலிய தேவ மகளிர் கல்லூரியில் வணிக கல்வியில் உயர்தரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று வந்தார்.

இந்நிலையில், மூளைச்சாவடைந்து விஹங்கனாவின் இதயம் மற்றும் நுரையீரல் மற்றுமொரு நோயாளிக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

விஹகனாவிடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும், ஆபத்தான நிலையிலுள்ள இரண்டு நோயாளிகளுக்கு வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளது.

விஹங்கனாவிடமிருந்து எடுக்கப்பட்ட கல்லீரல் மற்றும் கண்களின் சவ்வுகள் மேலும் மூன்று பேரின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவியுள்ளன.

விஹங்கனாவின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட உடல் உறுப்புகள் மூலம் மொத்தம் 07 பேர் உயிர் காக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் அறுவை சிகிச்சை இலங்கையின் சிறப்பு வைத்தியர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதயம் மற்றும் நுரையீரல் செயலிழப்பு காரணமாக ஆபத்தான நிலையிலிருந்த ஒருவருக்கு இந்த இரண்டு உறுப்புகளும் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்த உறுப்புகள் தனித்தனியாகப் பொருத்தப்பட்டிருந்தாலும், ஒரே நேரத்தில் இது போன்ற உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்வது இலங்கையில் இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு...

குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்குப் போதுமானதாக அரசாங்கத்தின் வருமானம் காணப்படவில்லை என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலி மாவட்டத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

எமது அன்றாட செலவுகளுக்கு போதுமான வகையில் அரசாங்கத்தின் வருமானம் இருக்கவில்லை.

உதாரணமாக இந்த மார்ச் மாதத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், கொடுப்பனவு மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 196 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

எனினும், இம்மாதத்திற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கான வருமானம் 173 பில்லியன் மாத்திரமே. அந்த வகையில் மார்ச் மாத செலவுகளில் 23 பில்லியன் குறைபாடு காணப்படுகின்றது.

வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடனுக்காக 500 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகை தேவைப்படுகிறது.

தமிழ் சிங்கள புத்தாண்டு காரணமாக இரண்டு மாத சம்பளங்களை வழங்க வேண்டியுள்ளது.

அந்த வகையில் இந்த இரண்டு மாதங்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது கடன் தொகையிலிருந்து ஒரு தொகையை திறைசேரி உபயோகப் படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். IMF முதல்

## சகல சுயாதீன...

களை தெரிவு செய்வதில் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சகல சுயாதீன ஆணைக்குழுக்களும் அரசியலமைப்பின் பேரவையின் மூலம் நியமிக்கப்படுகின்றன. அரசியலமைப்பு பேரவை நியமிக்கப்பட்டு தற்போது 03 மாத காலம் நிறைவடைகிறது. அப்பேரவை முதல் தடவையாக கடந்த ஜனவரி 25 இல்,கூடியுள்ளது. அந்தவகையில், புதிதாக நியமிக்கப்படவுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களில் தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய திட்டமிடல் ஆணைக்குழு ஆகியனவும் உள்ளடங்கியதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், எதிர்வரும் 02 வாரங்களுக்குள் அனைத்து ஆணைக்குழுக்களையும் நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தரமற்ற உணவு...

நடவடிக்கை எடுத்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டு பண்டிகையின் போது வர்த்தகர்கள் தரமற்ற உணவுப் பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் இந்த சோதனைகள் நடத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டிகைக் காலங்களில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி இணையம் மூலம் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இதுபோன்ற நேரங்களில் மக்கள் எதிர்நோக்கும் முறைகேடுகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல், தரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்தல், விலை பொறிக்கப்படாமல் உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தரவை மீறி செயற்படும் அனைத்து வியாபாரிகளும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, பொருட்களை கொள்வனவு செய்யும்போது வர்த்தகர்களால் ஏதேனும் முறைகேடுகள் நடந்தால் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தெரிவிக்குமாறு அனைத்து நுகர்வோரையும் சபை கேட்டுக்கொள்கிறது.

## குறைந்த வருமானம்...

மண்டபத்தில் 995 பயனாளிகளுக்கும், நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தை சனசமூக மண்டபத்தில் 448 பயனாளிகளுக்கும், வெள்ளவத்தை ரஞ்சன் விஜேரத்னபுர சனசமூக மண்டபத்தில் 169 பயனாளிகளுக்கும் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கத்தின் 2022/2023 பெரும்போக அரிசிக் கொள்வனவு மற்றும் அரிசி கையிருப்பு அகற்றல் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இந்த இலவச அரிசி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்துக்கு மாதம் 10 கிலோ அரிசி என்ற அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு இலவசமாக இவ்வரிசி வழங்கப்படும்.

இருபது இலட்சம் குடும்பங்களுக்கு இந்த அரிசி மானியம், வழங்குவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில், பின்னர் அதனை 29 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, காலி, மாத்தறை உள்ளிட்ட பல மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தெமட்டகொட மிஹிதுசென்புர சனசமூக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சாகல ரத்நாயக்க, இலங்கை அதலபாதாளத்தில் சென்று கொண்டிருந்த வேளையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பினால் திருப்புமுனையை ஏற்படுத்த முடிந்ததாக சுட்டிக்காட்டினார்.

அந்தத் திட்டத்துக்கு ஏற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கடினமாக இருந்தபோதிலும், கடினமான மற்றும் குறுகிய காலத்திற்குள் மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்க முடியும். இதனாலே, இந்த கடினமான முடிவுகள் அனைத்தும் எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அன்று எடுக்கப்பட்ட தவறான பொருளாதார தீர்மானங்களினால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் சரியான பொருளாதார வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகைதந்த மக்களின் தகவல்களை சாகல ரத்நாயக்க கேட்டறிந்ததோடு அவர்கள் முன்வைத்த பிரச்சினைகளையும் செவிமடுத்தார். கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வட மாகாண...

இந்நிலையிலேயே வட மாகாணத்திலுள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்களை ஒருங்கிணைக்கும் வகையில் இணைத் தலைவராக வடமாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் நிதி மோசடி...

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.மேலும், இவர்கள் இத்தண்டனையை இலங்கை சிறையில் அனுபவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் ஒரு நிதி நிறுவனத்தின் ஆயிரம் கோடி ரூபாவுக்கும திகமான நிதியை சுருட்டிக் கொண்டு தமிழகத்துக்கு தப்பிச் சென்றுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து படகில் தப்பிச் சென்றனர். இவர்களை கடத்திய வடமராட்சி நபர், சில வாரங்களின் முன் கஞ்சா கடத்தல் வழக்கில் தமிழகத்தில் கைதானார். அவர்கள் எந்த ஆவணங்களுமின்றி சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் இரண்டு மாதங்கள் சிறை தண்டனையும், தலா 5,000 ரூபாய் அபராதம் விதித்து வேதாரண்யம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவ்விருவரையும் உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்தி, இலங்கைச் சிறைகளில் இருவரின் தண்டனைக் காலத்தை அனுபவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## துனுசியா கடலில்....

இவர்கள் பயணித்த படகு மூழ்கியதில் இவ்வனர்த்தம் நிகழ்ந்தது. ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். கடல்மார்க்கமாகச் செல்லும் இவர்கள், சில நேரங்களில் உயிராபத்துக்களிலும் சிக்குவதுண்டு.

இருப்பினும் நாளாந்தம் இவ்வாறு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்நிலையிலேயே,இவ்விபத்தும் நிகழ்துள்ளது. இதற்கிடையில், கடந்த 48 மணி நேரத்தில் 58 படகுகளிலிருந்து 3,300 பேரை மீட்டு ஒருங்கிணைத்ததாக இத்தாலிய கடலோர காவல்படையினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

பெரும்பாலான மீட்புப் பணிகள் துனிசியாவிலிருந்து ஆபிரிக்காவுக்கு மிக அருகிலுள்ள இத்தாலிய தீவான லம்பேடுசாவுக்குச் செல்லும் படகுகளில் நடத்தப்பட்டன.

## தமிழக மீனவர்களின்....

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும், அவர்களின் படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலங்கைஇந்திய மீனவர்கள் குழுக்களின் சார்பில், மார்ச் முதல் வாரத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் பயனாக, கைதான தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். மீனவர்களுக்காக சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு குறூப் இன்சூரன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏற்படும் சேதங்களை அரசு வழங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

## பால் மாவின்...

அச்சங்கம் தெரிவித்துள்ளது. பால்மா, சீனி ஆகிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ள நிலையில், அதன் பயன்களை மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் நேற்று முதல் பால் தேநீர் கோப்பையொன்றின் விலையை 90 ரூபாயாக குறைத்துள்ளதாக அகில இலங்கை உணவகங்கள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே பால் தேனீர் கோப்பை ஒன்றின் விலை 100 ரூபா முதல் 130 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அதே வேளை நாட்டில் மீன், அரிசி பருப்பு மரக்கறிகளின் விலைகளும் குறைவடைந்துள்ளன. உணவுப் பொதிகளின் விலைகளை குறைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு பேராயரின்...

இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில், இம்மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போது உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை மே மாதம் (09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்தது. பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லையென சுட்டிக்காட்டிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, அவற்றை நடைமுறைப்படுத்த சட்டமாஅதிபருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியுள்ளார்.

## அரச ஊழியரின்...

இதற்கான விஷேட சுற்றறிக்கை ஓரிரு தினங்களில் வெளியிடப்படுமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கான அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தவிர்க்கும் வகையில், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள முதற்கட்ட கடன் தொகையிலிருந்து ஒரு தொகையை பெற்றுக் கொள்ளவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்...

ஜப்பானிய கேரியர் ஆல் நிப்பான் ஏர்லைன்ஸுடன் இவ்விமானம் 787 ஒக்டோபர் 2011 இல் சேவையில் நுழைந்தது.

“இந்த விமானம் நேற்று முதல், வாரத்தில் நான்கு நாட்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் சிங்கப்பூரிலுள்ள சாங்கி விமான நிலையத்திற்கும் இடையில் நேரடி விமான சேவையில் ஈடுபடவுள்ளதாக Aitken Spence நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் வசந்த குடலியனகே தெரிவித்துள்ளார்.

Aitken Spence சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் இலங்கை முகவரானது ஞாயிறு, புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் சேவைகளை நடாத்த திட்டமி ட்டுள்ளது.

இந்த விமானம், ஒக்டோபர் முதல் வாரத்தில் ஏழு நாட்களும் கொழும்பு மற்றும் சாங்கி இடையே சேவையில் இருக்கும்.

78710 ட்ரீம்லைனர் சூப்பர் திறனுள்ள 787 குடும்பத்தின் சமீபத்திய உறுப்பினராகும்.

53 வருடங்களாக தொடர்ச்சியான சேவையை வழங்கி வரும் சிங்கப்பூர் எயார்லைன்ஸ், இலங்கையின் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்துவதோடு, இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை வலுப்படுத்தவும் இந்த சமீபத்திய விமானத்தின் மூலம் பெரும் பங்களிப்பை வழங்கி வருவதாக குடலியனகே தெரிவித்தார்.

# வாழ்வின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு விழா

அருட்பணி. ஜெ. தோமஸ்



கத்தோலிக்கத் திருச்சபை மார்ச் 25ஆம் திகதி கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு விழாவை கொண்டாடுகிறது.

இந்த விழா ஐந்தாம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

தொடக்கத்தில் இந்த விழா மார்ச் மாதம் 25 ம் திகதி கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு 9 மாதங்களுக்கு முன் கொண்டாடப்பட்டது.

இது தவக்காலம் அல்லது உயிர்ப்பு பெருவிழாவின் காலங்களில் வந்ததால், இவ்விழா குறித்துக்காட்டும் மகிழ்ச்சி பண்புகளை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, பிற்காலங்களில் டிசம்பர் 18 ஆம் திகதிக்கு, இந்த விழா மாற்றியமைக்கப்பட்டது.

இந்த விழாவானது மரியாளின் முன்னறிவிப்பு, இயேசு கருவில் உருவான விழா, இறைமகன் மனிதரான விழா என பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

1969 ம் ஆண்டிற்கு பிறகு நடந்த வழிபாட்டு மறுசீரமைப்பிற்கு பின் இந்த விழாவானது கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழா என்று அழைக்கப்பட்டது.



புதிய திருவழிபாட்டு ஒழுங்கின்படி இந்த விழா மார்ச் மாதம் 25 ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டும்.

இது தவக்காலத்தில் கொண்டாடப்பட்டாலும் பெருவிழா தான்.

இந்த விழாவின் பெயர் மரியாளின் மீட்புப் பணியில் பங்கு குறைவதாகஅர்த்தம் கொள்வதற்காக கொடுக்கப்படவில்லை. மாறாக, இந்த விழா இயேசுவின் மீட்புப்பணியில் அவருக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் குறிப்பதாக அமைகிறது. கடவுளின் தூதர் மரியாளை வாழ்த்துகின்றபோது, மரியாள் கலங்குகிறாள். “இந்த வாழ்த்து எத்தகையதோ” என்ற அச்சம் கொள்கிறாள்.

மரியாள் எதற்காக கலங்க வேண்டும்? கடவுளின் தூதரே அவரை வாழ்த்துகிற போது அவள் மகிழ்ச்சி தானே கொண்டிருக்க வேண்டும். அதை விடுத்து, அவள் கலங்குவது எதற்காக? என்ற கேள்வி நிச்சயம் நமது உள்ளத்திலே எழலாம்.

யார் நம்மைப் புகழ்ந்தாலும் அதிலே மகிழ்ச்சி அடைவதை விட அதில் நாம் எச்சரிக்கை உணர்வு கொண்டிருப்பது மிக முக்கியமானதாகிறது.

யார் நம்மைப் புகழ்கிறார்களோ அவர்கள் மட்டில் கொண்டிருக்க வேண்டிய எச்சரிக்கை உணர்வல்ல, நமது வாழ்வை இதே போன்று வாழ வேண்டும் என்கிற எச்சரிக்கை உணர்வு நமக்குத் தேவைப்படுகிறது.

இதுவரை சிறப்பாக வாழ்ந்திருக்கிறோம். இனியும் மற்றவர்களின் நல்ல வார்த்தைகளுக்கு ஏற்ப, புகழ்ச்சிக்கு ஏற்ப நமது வாழ்வை வாழ வேண்டிய பொறுப்புணர்வு இங்கே நமக்கு தேவைப்படுகிறது.

அந்த பொறுப்புணர்வு இவ்வளவு நாள் வாழ்ந்த வாழ்வை இனி வரக்கூடிய நாட்களிலும் சிறப்பாக வாழ வேண்டிய, அந்த கடமையுணர்வுதான் மரியாளை கலங்கச் செய்கிறது.

ஆனால், கபிரியேல் தூதர் ”அஞ்ச வேண்டாம், கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்” என்று சொல்கிறார். அதாவது நல்ல எண்ணங்களோடு வாழ்கிறபோது அந்த வாழ்வை சிறப்பாக வாழ கடவுளே நமக்கு துணைசெய்வார் என்பது மரியாளின் வாழ்வில் வெளிப்படுகிறது.

நாம் நேர்மையோடு வாழ்கிறபோதும் அந்த வாழ்வை மற்றவர்கள் அங்கீகரித்து பாராட்டுகிறபோதும் நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. இதுநாள் வரை நம்மைக் காத்து வந்த இறைவன் இனி வரக்கூடிய நாட்களிலும் கைவிட மாட்டார் என்கின்ற எண்ணத்தோடு நமது வாழ்வை நம்பிக்கையுடன் வாழ்வோம்.






# ஆழ்நிலையை அனுபவிக்கும் இடமாக ஆலயங்கள் திகழட்டும்

கர்தினால் ரெனெய்ரோ

வழிபாட்டு முறை என்பது உயிரினங்கள் கடவுளின் படைப்பை நோக்கித் திரும்புவதற்கான மிகச் சிறந்த நேரம் என்பதால் அதில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் தூயஆவியிலிருந்து தொடங்க வேண்டும் என்றும் புனித உணர்வை முற்றிலுமாக இழந்துவிட்டால் நம்பிக்கையின் செயல் துளிர்விடும் நிலமும் காலநிலையும் காணாமல் போய்விடும் என்றும் கர்தினால் ரெனெய்ரோ தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தவக்காலத்திற்கான நான்காம் வார சிந்தனையை “திருவழிபாட்டில் நம்பிக்கையின் மறைபொருள்” என்ற கருப்பொருளில் வத்திக்கானின் புனித ஆறாம் பவுல் அரங்கத்தில் வழங்கியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருப்பீட உயர் அதிகாரிகளுக்கு தியான சிந்தனைகளை வழங்கிவரும் கர்தினால் ரெனெய்ரோ வழிபாட்டு முறை என்பது நற்செய்தி நம்மை எதை நோக்கி இட்டுச்செல்கிறது என்பதற்கான அடித்தளம் மற்றும் மையப்புள்ளி என்றும் நற்செய்தியில் கூறப்படும் உவமையில் எல்லோரையும் விருந்துக்கு அழைக்க வேலையாட்களை தெருக்களிலும் சந்துக்களிலும் அனுப்பப்புவது போல ஆலய விருந்து மண்டபத்தில் நற்கருணை என்னும் ஆண்டவரின் திருவிருந்து (1 கொரி 11:20) தயாரிக்கப்படுகிறது என்றும் எடுத்துரைத்தார்.

புனித உணர்வை முற்றிலுமாக இழந்துவிட்டால் நம்பிக்கையின் செயல் துளிர்விடும் நிலமும் காலநிலையும் நம்மில் காணாமல் போய்விடும் என்றும் இது மதச்சார்பின்மையின் மிக மோசமான விளைவு, "புனிதத்துவத்தின் பற்றாக்குறை, அலட்சியம், மற்றும் நவீன உலகின் ஆழமான அடையாளம்" என்ற சார்லஸ் பெகுய் என்பவரின் வார்த்தைகளையும் அவர் நினைவுகூர்ந்தார் கூட்டத்தில் பங்கேற்றோர் மக்களுக்கு கடவுளைப் பற்றிய உண்மையான அனுபவம், மற்றும் ஆழ்நிலையை அனுபவிக்கும் சிறப்பு மிக்க இடமாக ஆலயங்கள் செயல்பட முயற்சிப்போம் என்றும் கத்தோலிக்க வழிபாட்டு முறை ஒரு வலுவான, புனிதமான மற்றும் அருட்பணியாளர் அடையாளத்துடன் கூடிய ஒரு செயலில் இருந்து மக்கள் பங்கேற்பு அதிகமாகக் காணப்படும் முறையாக மாறியதையும் சுட்டிக்காட்டினார் கர்தினால்.

ஆண்டவரின் திருவிருந்தை, தூய்மையான அருளடையாளங்களின் அனுபவமாக, தனிப்பட்ட விதத்தில் மட்டுமன்றி சமூக அளவிலும் அமைதியின் வழியாகப் பெற முடியும் என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் தவநிலை அமைதி, மறைபொருள் அமைதி எனும் இரண்டு வகையான அமைதிகள் உள்ளன என்று எடுத்துரைத்த கர்தினால், கடவுளால் படைக்கப்பட்ட உயிரினம் கடவுளை நோக்கி எழ முயலும் அமைதி, தவநிலை அமைதி என்றும், படைப்பை நெருங்கும் கடவுளால் தூண்டப்படும் அமைதி, மறைபொருள் அமைதி என்றும் விளக்கினார்.

மெரினா ராஜ்

## பனிமயமாதா சங்கத்தின் திறந்தவெளி சிலுவைப்பாதை



கொழும்பு புறக்கோட்டை புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் இயங்கிவரும் பனிமயமாதா சங்கத்தின் ஏற்பாட்டில் தவக்காலத்தையொட்டிய திறந்தவெளி சிலுவைப்பாதை நிகழ்வு அண்மையில் தேவத்தை பெசிலிக்கா பேராலயத்தில் நடைபெற்றது. தென்னிந்திய அருட்தந்தை நிர்மல் சூசைராஜ் அடிகளார் மற்றும் அருட் சகோதரி ஜெமிலா ஆகியோர் சிலுவைப்பாதை தியானத்தை வழி நடத்தினார்கள். சிலுவைப்பாதையைத் தொடர்ந்து திருமணித்தியாலம் இடம்பெற்று சிறப்புத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திறந்தவெளி சிலுவைப்பாதை நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: வட கொழும்பு புஸ்பராஜா)

# "கல்லை அகற்றி விடுங்கள்"

## அருட்தந்தை பிரிட்டோ அடிகளாரின் மறையுரையிலிருந்து...



தவக்காலத்தின் ஐந்தாம் வார ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியில் இயேசுவின் புதுமை கூறப்படுகிறது.

இயேசு மரித்த இலாசருவை மீண்டும் உயிர்ப்பித்த புதுமை நிகழ்கின்றது

இலாசர் இயேசுவின் உற்ற நண்பன்.

இலாசர்,மரியா ,மார்த்தா ஆகிய மூவரும் சகோதரர்கள். இயேசு அந்த குடும்பத்துடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார் என்றும் அவரது பணி வாழ்வின்போது அவர்களை பல தடவைகள் சந்திக்கச் சென்றுள்ளார் என்றும் பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்றது.

இயேசு கலிலேயாவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது இலாசர் கடும் சுகவீனமுற்றிருந்தார். உடனே இயேசுவுக்கு செய்தி அனுப்பப்பட்டது. உமது நண்பன் கடும் நோயிலிருக்கின்றார் நீங்கள் வந்து பாருங்கள் என அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதைக் கேட்ட இயேசு இலாசரின் நோய் மரணம் வரை செல்லாது. கடவுளுடைய மாட்சிமை வெளிப்படும் பொருட்டே அவர் நோயுற்றுள்ளார் என தெரிவிக்கின்றார்.

கடந்த வாரம் நற்செய்தியில் பிறவிக் குருடர் ஒருவரை இயேசு குணமாக்கி யிருந்தார்.

அப்போது சீடர்கள் இயேசுவைப் பார்த்து இவன் குருடனாய் இருப்பது இவன் செய்த பாவமா அல்லது இவனது பெற்றோர் செய்த பாவமா என கேட்கின்றனர்.

அதற்கு இயேசு அது இவன் செய்த பாவமும் இல்லை. இவனது பெற்றோர் செய்த பாவமும் இல்லை. கடவுளின் மாட்சிமை வெளிப்படும் பொருட்டே இவன் குருடனாக பிறந்துள்ளான் என கூறுகின்றார்.

நற்செய்தியானது மரணத்தைப் பற்றி குறிப்பிடும் போது அதனை நித்திரை அல்லது தூக்கம் என்றே குறிப்பிடுகிறது.

தொழுகைக் கூடத் தலைவனான யாயிரின் மகள் நோயுற்ற போது அவர்கள் இயேசுவிடம் வந்து அவளை குணப்படுத்துமாறு வேண்டுகின்றனர்.

அவரது இல்லத்துக்கு சென்ற போது அவள் இறந்துவிட்டாள் என அங்கு பெரும் திரளான மக்கள் அழுகையும் குமுறலுமாக நின்றனர். இயேசு அவர்களைப் பார்த்து ஏன் அழுகின்றீர்கள் அவள் இறக்கவில்லை. சிறுமி உறங்குகின்றாள் என தெரிவித்தார். மக்களோ அவரைப் பார்த்து ஏளனம் செய்தனர்.

இயேசு அவர்கள் அனைவரையும் வீட்டிலிருந்து வெளியே அனுப்பி விட்டு சிறுமியின் கையைப் பிடித்து "நான் உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு" என தெரிவிக்கின்றார். சிறுமி உடனே எழுந்திருந்தாள்.

ஒரு விதவையின் மகன் இறந்து அவனை அடக்கத்திற்காக பாடையில் எடுத்துச் செல்லும் போது அந்தப் பாடையை இயேசு தொட அவன் உயிரோடு எழுந்தான்.

இயேசு தனது உற்ற நண்பன் இலாசர் நோயுற்றிருந்த போதும் அவர் அவரது பணி வாழ்வை மேற்கொண்டு விட்டு இரண்டு நாள் கடந்தே அவர்களது வீட்டுக்கு வருகின்றார்.

அவரை எதிர்கொண்டு ஓடி வந்த மார்த்தா ஆண்டவரே நீர் இங்கிருந்திருந்தால் என் சகோதரன் இருந்திருக்க மாட்டான் என கூறுகின்றாள். அதன் போது அங்கு நின்ற சீடர்களும் அழுதார்கள். இயேசுவும் குமுறி அழுதார் என தெரிவிக்கப்படுகிறது.அதன் பின்னர் அங்கு உரையாடல் தொடங்குகிறது. அப்போது இயேசு, "என் மீது நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்றார். இயேசு அவரது பணி வாழ்வில் அழுத ஒரே சந்தர்ப்பம் இது மாத்திரமே ஆகும். இயேசு இலாசரின் கல்லறையை மூடி இருந்த கல்லை அகற்றி விடுமாறு அங்குள்ளவர்களிடம் தெரிவிக்கின்றார். அப்போது மார்த்தா போதகரே அவன் இறந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டனவே நாற்றமடிக்குமே என்றார்.

ஒருவர் இறந்தால் அவரது ஆன்மா அவரைச் சுற்றி மூன்று நாட்கள் இருக்கும் என்பதே யூதர்களின் நம்பிக்கை. சில வேளை அவ்வாறு இறந்தவர்களின் ஆன்மா மூன்று நாட்களுக்குள் மீண்டும் அவரது உடலுக்குள் வந்து விடலாம் என்றும் அவர்கள் கருதினார்கள். அவ்வாறு மூன்று நாட்களுக்கு பின்னர் அவரிடம் இருந்து செல்கின்ற ஆன்மா மீண்டும் அந்த உடலுக்குள் வரும் என்பதற்கு கொஞ்சம் கூட சாத்தியம் கிடையாது என்பதே அவர்களது கருத்து. அதனால்தான் மார்த்தா ஆண்டவரே! இலாசர் இறந்து நான்கு நாட்கள் ஆக்கிவிட்டன. அதனால் அது நாற்றமடிக்குமே என்றும் தெரிவித்தார்.

இயேசு அப்போது இலாசருவே வெளியே வா என்று கூறிய போது அவன் வெளியே வந்தான். அப்போது அவனது கை, கால் தலையிலும் துணியினால் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்து விட்டு அவனைப் போகவிடுமாறு இயேசு தெரிவிக்கின்றார்.

அந்த கல்லறை மூடப்பட்டிருந்த கல்லை நகர்த்துவது இயேசுவுக்கு பெரிய காரியம் அல்ல. எனினும் அங்கு இருந்தவர்களைப் பார்த்து கல்லை அகற்றுமாறு இயேசு கூறுகிறார். உங்களால் செய்ய முடிந்ததை நீங்களே செய்யுங்கள் அதன் பின் கடவுள் உங்கள் மத்தியில் புதுமை செய்வார் என்பதே அதன் பொருள்.

இன்று ஆண்டவராகிய இயேசு என்னையும் உங்களையும் பார்த்து உங்கள் உள்ளத்தில் உள்ள பாவம் என்ற கல்லை அகற்றி விடுங்கள் என்று கேட்கின்றார். அவ்வாறு அகற்றினால் நமது வாழ்க்கையிலும் அவர் புதுமை செய்வார். கடவுள் எமக்குள் புதுமை செய்வதற்கு எம்உள்ளத்தில் உள்ள பாவ நாட்டம் என்ற கல் அகற்றப்பட வேண்டும். இறையருள் எமக்குள் பிரவேசிக்க, செயற்பட அந்த பாவங்கள் தடையாக உள்ளன. அதை கடவுள் அகற்ற முடியாது. நாமே அகற்றி அவருக்கு வழிவிட வேண்டும். நான் கல்லை அகற்றினால் அது நாற்றம் அடிக்கும். அந்த துர்நாற்றத்தை அகற்றவே இயேசு எமக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.

இந்த தவக்காலத்தில் நாம் எமது பாவங்கள் மற்றும் குற்றங்களை களைந்து சிறந்த ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுக் கொள்வோம். அப்போது இயேசுவின் நாமத்தினால் எமது பாவம் மன்னிக்கப்பட்டு அவரது வல்லமையை எமது வாழ்விலும் நாம் உணர முடியும்.

பரிசுத்த வார்த்தை அண்மிக்கும் நாம் இக்காலத்தில் பாவங்களை விட்டு கட்டுக்களை அவிழ்த்து இறைவனின் பிள்ளைகளாக அவரிடம் சரணடைவோம்.

எல். செல்வா

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22



### குறள் தரும் சிந்தனை

தன்துணை இன்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று

தனக்கு உதவியான துணையே இல்லை, பகையே இரண்டு, தானே ஒருவன் இந் நிலையில் அப் பகைகளில் ஒன்றை இனியத் துணையாகக் கொள்ள வேண்டும்.

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணமளிக்க அரசின் ஏற்பாடு

சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 10 கிலோ வீதம் இரு மாதங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இந்நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. தற்போது அந்நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக நாடு மீட்சி பெற்றுக் கொண்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயம்.

பொருளாதார நெருக்கடியின் விளைவான தாக்கங்களும் பாதிப்புகளும் சாதாரணமானவை அல்ல. அவை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மத்தியில் கடும் அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை மறைக்க முடியாத உண்மையாகும்.

இந்த நிலையில்தான் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் சமுர்த்தி நிவாரணம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்க்கும் வகையில் இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடி தோற்றம் பெற்றது முதல் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி அவ்வப்போது பொருளாதார நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது மறைக்க முடியாத உண்மையாகும். முற்றிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தியே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ஒரு போதும் சுமையாகவும் அழுத்தமாகவும் அமைவதைத் தவிர்ப்பதே இத்திட்டங்களின் இலக்காகும்.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறும் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 10 கிலோ கிராம், இரு மாதங்களுக்கு மொத்தம் இருபது கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை அமைச்சரவைக்கு முன்வைத்தார். ஜனாதிபதியின் இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

அதற்கேற்ப 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இத்திட்டத்திற்கு தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டதோடு, 61 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நடவடிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் ஆதரவுடன் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவுக்கு 6,200 மில்லியன் ரூபாவும், நெல் உலர்த்துவதற்கு 290 மில்லியன் ரூபாவும், கதிரடிக்கும் வாடகைக்கு 590 மில்லியன் ரூபாவும், பொதிச் செலவுக்கு 200 மில்லியன் ரூபாவும், நெல் ஆலை உரிமையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக 160 மில்லியன் ரூபாவும், அரிசியைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவுக்கு 600 மில்லியன் ரூபாவும் என்றபடி 8,040 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டது. சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து இத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவில் வித்தியாசங்கள் ஏற்படுமாயின் வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை இதற்குப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு பரந்த அடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டு நாட்டின் குறைந்த வருமானம் பெறும் இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மாதத்திற்கு 10 கிலோ வீதம் இரு மாதங்களுக்கு 20 கிலோ அரிசியை வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டத்தை செயலுருப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இத்திட்டத்தை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இலவச அரிசி வழங்கும் இத்திட்டமானது குறைந்த வருமானம் குடும்பங்களுக்கு ஆறுதலாகவும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒத்துழைப்பாகவும் அமைந்துள்ளது. இதில் ஐயமில்லை.

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் பாதிப்பாகவும் சவாலாகவும் அமைவதைத் தவிர்ப்பதில் அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தி வருகின்றது. அந்த வகையில் தற்போது இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீண்டு வருகின்ற போதிலும், 08 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் மேலான பெருந்தொகை நிதியொதுக்கீட்டில் இத்திட்டத்தை முன்னெடுப்பது இலகுவான காரியமல்ல. நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதை இத்திட்டத்தின் ஊடாக அரசாங்கம் மீண்டும் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆகவே நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுமையாகவும் பாதிப்பாகவும் அமைவதைத் தவிர்க்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். இது அனைத்து தரப்பினரதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# வனங்களை பாதுகாக்கும் அர்ப்பணிப்பான பணியில் வனவாசி ராகுல தேரர்



## –தேசிய நாமல் உயன (பூங்கா) 32 ஆவது ஆண்டு நிறைவு

மனிதன் என்பவன் இயற்கையின் அபூர்வ படைப்பாகும். தாயின் வயிற்றிலிருந்து பிறந்து இவ்வுலகை காணும் அனைத்து உயிரினங்களையும் இயற்கையென்னும் அன்னை மிகவும் அன்புடன் அரவணைத்துக் கொள்கிறார். அந்த அபூர்வமான படைப்பான எமக்கு பெறுமதி வாய்ந்த மரம், செடி, கொடிகளை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைத் தாவரங்கள் என நாம் அறிமுகம் செய்வது மனிதனின் ஒத்துழைப்பின்றி அந்தந்த சூழலுக்கு ஏற்ப வளரும் தாவரங்களாகும். மனிதனின் ஆதரவின்றி வளரும் அந்த மரம்,செடி, கொடிகள் மனிதனுக்கு தூயகாற்றை வழங்கி சுதந்திரமாக சுவாசித்து ஆரோக்கியமாக வாழும் உரிமையை வழங்குகின்றன. முன்னர் இயற்கையோடு மனிதன் இயைந்த வாழ்க்கையை நடத்தினான். இயற்கையை பாதுகாக்க மனிதன் அவற்றுடன் பிணைந்து வாழ்ந்ததாக வரலாற்று தகவல்கள் மூலம் தெளிவாகிறது. பலவிதமான மிகவும் பெறுமதி வாய்ந்த தாவரங்கள் பலவற்றுக்கு உரிமை கூறும் எமது நாடு வளமான நாடாகும்.

தேசிய நாமல் உயன திட்டம் உலகில் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த அழகான திட்டமாகும். பல்லுயிர் பெருக்கம் கொண்ட தேசிய நாமல் உயன உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மனதை கவர்ந்த இயற்கை எழில் நிறைந்த இடமாகும். இது 2000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த அழகிய வனமாகும். இங்கு இளஞ்சிவப்பு படிக



மலைத்தொடர் 600 தொடக்கம் 700 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

500 மில்லியன் ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட சிவப்பு படிக மலைத்தொடர் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தது. இம்மலைத்தொடர் ஏழு மலைகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. இங்கிருந்து ஷாஜகான் தாஜ்மஹாலை கட்டுவதற்காக இப்படிகக் கற்களைக் கொண்டு சென்றதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு இரண்டாம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் அரசன் ஆட்சி செய்த காலத்தில் நாமல் உயன என்பது பௌத்த மதத்தலமாக விளங்கியது. அன்றைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் உலகில் அது மக்களின் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு இருந்தது. காலப்போக்கில் மரங்கள் நிறைந்த வனமாகக் காணப்பட்டாலும், 21 ஆம் நூற்றாண்டில் மக்கள் கொங்கிரீட் வனங்களை உருவாக்கத் தொடங்கினார்கள். நாட்டில் அநேகமானோர் அவ்வாறு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் பாரிய நாக மரங்களைக் கொண்ட இந்தக் காட்டை காப்பாற்றுவதற்காக இலங்கையரும் பௌத்த பிக்குவுமான வனவாசி ராகுல தேரர் முன்வந்தார். அப்பணியானது மிகவும் இலகுவான ஒன்றல்ல.

"1991 மார்ச் 28 ஆம் திகதி நான் இந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த திட்டத்தை ஆரம்பித்தேன். அப்போது மக்கள் வசிக்கக் கூடிய சூழல் அங்கு காணப்படவில்லை. மரக்கடத்தல்காரர்கள், புதையல் தோண்டுபவர்கள் இக்காட்டை அழித்திருந்தார்கள். நான் ஒரு பாரிய மோரமரத்தின் மீது சிறிய குடிசை அமைத்து இந்தக் காட்டை எவ்வாறாவது பாதுகாப்பேன் என்று உறுதியுடன் இத்திட்டத்தை ஆரம்பித்தேன். 2000 வருட பழைமை வாய்ந்த வரலாறு நாமல் உயனவுக்கு உண்டு. 2023 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நாமல் உயன தற்போது 32 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்."

இவ்வாறு கூறுகின்றார் வனவாசி ராகுல தேரர்.

"இங்கு காணப்படும் இளஞ்சிவப்பு படிகப்பாறை மிகவும் சக்தி(Power Energy) வாய்ந்தது. மனிதனின் மனநலத்தை மேம்படுத்துவதுடன் மனித உடம்பின் சக்தியையும் பெருக்குகிறது. பல நோய்களுக்கு மருந்தாகவும் அமைகின்றது. உலகின் பல நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தந்தாலும், ஜப்பானியர்கள் இந்தப் பாறையின் சக்தியை அறிந்து அதிகமாக இங்கு வருகின்றார்கள். உயிர்ப்பல் வகைமை மற்றும் பாறைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்களையும் மற்றும் மலை ஏறுபவர்களையும் இங்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கின்றேன் .இங்கு உங்களுக்கு கல்வி அறிவு மட்டுமல்ல நல்ல அனுபவமும் கிடைக்கும். இது தேசிய உரிமையாகும். நாம் இதனைப் பாதுகாக்க வேண்டும். இங்கு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வகையில் பல திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் நாம் அந்நிய செலாவணியையும் சம்பாதிக்கலாம்.

தேசிய நாமல் உயன திட்டத்தை ஆரம்பித்த காலம் தொடக்கம் அனைத்து அரசாங்கங்களும் எனக்கு ஒத்துழைப்பை வழங்கின. அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தொடக்கம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை எனக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். நான் யாருடனும் எதுவித பிரச்சினையும் ஏற்படுத்திக் கொள்வதில்லை. நான் அரசியல் செய்யும் பிக்கு அல்ல. ஆரம்பத்தில் இதன் அனைத்துப் பணிகளையும் நானே மேற்கொண்டேன். 2018 ஆம் ஆண்டு இதன் நிர்வாக நடவடிக்கைகளை மத்திய கலாசார நிதியத்திற்கு எழுத்து மூலம் ஒப்படைத்துள்ளேன். நான் இதன் சொந்தக்காரன் அல்ல, காவலன் மாத்திரமே" என்கிறார் வனவாசி ராகுல தேரர். "விசேடமாக 1991 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை என்னுடன் இணைந்து இதற்கு தோள்கொடுத்த இந்நாட்டின் ஊடகங்கள் அனைத்துக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அதனால்தான் இங்குள்ள வரலாறு, சுற்றுச்சூழல், பூகோள பெறுமதிகள் தொடர்பாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க முடிந்தது"என்றும் அவர் தெரிவித்தார்.



வனவாசி ராகுல தேரர் அனைத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று தனது நாட்டுக்காகவும் இனத்திற்காகவும் பாரிய பணியை மேற்கொண்ட சிறந்த தேரராவார். பௌத்த தர்மத்தின் உண்மையான பொருளை புரிந்து கொண்ட அவர், துயருறும் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அவரின் இந்தப் பணியை பரிசளித்து மாத்திரம் கௌரவிக்க முடியாது.

2004 ஆம் ஆண்டு ராகுல தேரர் சூழல் பாதுகாப்புக்கான ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தேசிய நாமல் உயன 32 ஆவது வருடத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், வனவாசி ராகுல தேரர் தெரிவிக்கும் செய்தியாதெனில் "பிளவுபட்டு வேறாகி இருந்த காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இனபேதம், மதபேதம் என்பவற்றை இன்னும் தலைப்பாக எடுத்துக் கொள்ளாமல், நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியில் தேசிய நாமல் உயனவில் கைகோர்த்து கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவோம்" என்பதாகும்.



பாத்திமா நுஸ்ரா உவைஸ்
(தமிழில்: வீ. ஆர். வயலட்)

# கஹட்டகஸ்திகிலிய கங் இந்திக்கம வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





அநுராதபுரம் மாவட்டம் கஹட்டகஸ்திகிலிய கங் இந்திக்கம வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைய தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் (ONUR) பணிப்பாளர் சபை பிரதிநிதி கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் குளோபல் அஸோஸியேஸனின் முழு அனுசரணையில் அப்பாடசாலை மணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது அப்பாடசாலையில் கல்வி பயிலும் தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான அனைத்து மாணவர்களுக்கும், புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மதிய உணவும் வழங்கி வைக்கப்பட்டன.

கஹட்டகஸ்திகிலிய கங் இந்திக்கம வித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் (ONUR)பணிப்பாளர் சபை பிரதிநிதி கந்தசாமி கருணாகரன், வடமகாண நகர அபிவிருதி அதிகாரசபையின் பணிப்பாளர் திசாநாயக்கா, ஜனாதிபதி செயலக பாதுகாப்பு பிரிவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் சமன், அப்பகுதி இராணுவ பொறுப்பதிகாரி, ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். தங்களது கோரிக்கைக்கு ஏற்ப தமது பாடசாலைக்கு நேரடியாக வருகை தந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தமைக்காக அப்பாடசாலைச் சமூகம் இதன்போது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

# பிரிட்டனில் செல்வாக்கும், செல்வமும் நிறைந்த இனமாக பெருகும் இந்துக்கள்!

பிரிட்டன் நாட்டில் இந்துக்களின் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மக்கள் தொகை கணக்கீடு தகவல்களில் இருந்து சில சுவாரசிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவில் இருந்து பல்வேறு உலக நாடுகளுக்கும் சென்று இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இப்போதும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழர்களின் தேவை அங்கே இருப்பதால், இது போன்ற உலக நாடுகள் அவர்களை வரவேற்கவே செய்கின்றன. இதனால் வெளிநாடுகளுக்குச் செல்வது தொடர்ந்து அதிகரித்தே வருகிறது.

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளில் குடியேறும் நபர்கள் பெரும்பாலானோர் இந்துக்களாகவே உள்ளனர். வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அவர்கள் இந்து மதத்தையே தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். இதனால் இந்துக்களின் மக்கள்தொகை வெளிநாடுகளில் கணிசமாக அதிகரித்தே வருகிறது. அதன்படி இந்தியர்கள் அதிகம் இருக்கும் நாடுகளில் ஒன்றாக பிரிட்டன் இருக்கிறது. அங்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரதமராக இருக்கிறார்.

இதனிடையே பிரிட்டனில் மார்ச் 2021இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் பல நூற்றாண்டுகளில் முதல்முறையாகப் பிரிட்டன் நாட்டில் கிறிஸ்தவர்களின் மக்கள் தொகை 50 வீதத்தின் கீழ் குறைந்துள்ளது. கடந்த 2011இல் பிரிட்டன் மக்கள்தொகையில் 59.3 வீதம் பேர் கிறிஸ்தவர்களாக இருந்த நிலையில், இப்போது அது 46.2 வீதமாகக் குறைந்துள்ளது. இதன் மூலம் பிரிட்டனில் கிறிஸ்தவர்கள் மக்கள்தொகை குறைவது தெரிகிறது.

இந்த மக்கள்தொகை கணக்கின் தரவுகளை வைத்து வேறு பல துணை பிரிவுகளின் தகவல்களும் இப்போது வெளியாகி வருகின்றன. அதன்படி, சமீபத்திய கணக்கெடுப்பின்படி இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் வசிக்கும் மக்களில் மதங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, அங்கே இந்துக்கள் செல்வாக்காக உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதேபோல அங்கே வசிக்கும் பெரும்பாலான சீக்கியர்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகளை வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

2021இல் இந்து என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களில் 87 வீதம் பேர் தாங்கள் பொருளாதார ரீதியாக மிகவும் நல்ல நிலையில் இரு ப்பதாகத் தெரிவித்துள்ளனர். சீக்கியர்கள் ஒட்டுமொத்தமாகப் பிரிட்டனில் 82 வீதம் பேர் நல்ல நிலையில் உள்ளதாகத் தெரிவித்த நிலையில், அதைவிட அங்கு வசிக்கும் இந்துக்களின் பொருளாதாரம் மேம்பட்ட நிலையில் இருக்கிறது. அதேபோல பிரிட்டன் ஒட்டுமொத்த மக்கள்தொகையுடன் ஒப்பிடும்போது, இந்துக்களில் 54.8 வீதம் பேர் உயர்கல்வித் தகுதியைப் பெற்றுள்ளனர். அதேபோல அங்கு வசிக்கும் சீக்கியர்கள் பெரும்பாலானோர், அதாவது 77.7 வீதத்தினர் தங்கள் சொந்த வீடுகளில்தான் வசிக்கிறார்கள். அதேபோல இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதியில் வசிக்கும் ஒட்டுமொத்த மக்கள்தொகையுடன் ஒப்பிடும் போது, முஸ்லிம் மக்கள் அதிக நெரிசலான வீடுகளில் வாழும் வாய்ப்பு நான்கு மடங்கு அதிகமாகும். பிரிட்டனில் 16 முதல் 64 வயதானவர்களில் முஸ்லிம் மக்கள்தான் குறைந்தளவுக்கு வேலையில் இருக்கிறார்கள்.

# கிழக்கின் குரல்



## அம்பிளாந்துறை – குருக்கள்மடம் படகுப்பாதை கட்டண அறவீட்டுக்கு பயணிகள் எதிர்ப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் அம்பிளாந்துறை – குருக்கள்மடத்துக்கு இடையிலான படகுப் பாதையில் பயணித்து வரும் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படவுள்ள நடவடிக்கைக்கு பயணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அம்பிளாந்துறை – குருக்கள்மடத்துக்கு இடையிலான படகுப் பாதையில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து இதுவரைகாலமும் எந்தவித கட்டணமும் அறவிடப்படாத நடைமுறை இருந்து வந்ததுடன், இப்படகுபாதையில் பொதுமக்கள் இலவசமாக தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் இப் படகுப்பாதையில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவிடவுள்ளதாகத் தெரிவித்து, குருக்கள்மடம் இறங்குதுறையில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினுடைய மட்டக்களப்பு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தின் பிரதம பொறியியலாளர் எந்திரி. ஏ.எம்.றிஸ்வியினால் அறிவித்தல் பலகை அண்மையில் போடப்பட்டுள்ளது.

அதில் 'பாதை பயணத்துக்கான கட்டணம் அறவிடுதல்' எனும் தலைப்பிடப்பட்டு கட்டண விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 12 வயதுக்கு மேற்பட்ட பயணி ஒருவரிடமிருந்து 10 ரூபா படியும் சைக்கிளுடன் பயணிக்கும் ஒருவரிடமிருந்து 30 ரூபா படியும் மோட்டார் சைக்கிளுடன் பயணிக்கும் ஒருவரிடமிருந்து 50 ரூபா படியும் முச்சக்கரவண்டியுடன் பயணிக்கும் ஒருவரிடமிருந்து 100 ரூபா படியும் கார், வான், பிக்கப் வண்டிகள் முறையே பயணிக்கும் ஒருவரிடமிருந்து 250 ரூபா படியும் கட்டணம் அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைச் சீருடையுடன் பயணிக்கும் மாணவர்களுக்கும் அரசாங்க வாகனங்களுடன் பயணிப்பவர்களுக்கும் இலவசம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பயணிகள்,

இப்படகுப்பாதையில் தாம் இலவசமாக பயணித்து வந்ததாகவும் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் தம்மிடமிருந்து இதற்காக கட்டணம் அறவிடவுள்ள நடவடிக்கையை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்த நடைமுறையை நிறுத்தாவிடின், இதற்கு எதிராக தாம் போராடுவதற்கு நேரிடும் எனவும், படகுப்பாதை பயணிகள் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்

## இறக்காமத்தில் அரசினால் இலவச அரிசி விநியோகம்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 3,000 குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி விநியோகிக்கும் நடவடிக்கை இறக்காமம் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (26) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இறக்காமம் 3ஆம் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு அரிசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசியே இவர்களுக்கு வழங்கப்படுவதுடன், தலா குடும்பத்துக்கு 20 கிலோகிராம் படி அரிசி வழங்கப்படுகின்றது.

## வருடாந்த ஒன்றுகூடலும் பிரியாவிடை நிகழ்வும்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பாலியல், ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்றுகூடலும் பிரியாவிடை நிகழ்வும் அப்பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவ அதிகாரி எம்.என்.எம்.தில்ஷான் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாகவும் பிரதிப் பிராந்திய சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் எம்.பி. அப்துல் வாஜித், திட்டமிடல் மருத்துவ அதிகாரி எம். ஸி.எம்.மாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். இதன்போது, கடந்தாண்டு கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்றுநோய் பிரிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஓய்வு பெற்ற பிராந்திய சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஏ.ஜெளபருக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

## நந்தவனம் சந்திரசேகரனுக்கு கலைக்கேசரி விருது வழங்கல்



தமிழ்நாட்டில் 26 வருடங்களாக கலை இலக்கியப் பணியிலும் பத்திரிகைப் பணியிலும் ஈடுபட்டு வரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனுக்கு திருகோணமலை வாசல் இலக்கிய வட்டம் கலைக்கேசரி விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திருச்செந்தூரனின் ஏற்பாட்டில், திருகோணமலை மாநகராட்சி மன்ற பொது நூலகக் கேட்போர் கூடத்தில் வாசல் கவிதைக்கான சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனுக்கு திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ.பார்த்திபன் விருதினை வழங்கி வைத்தார்.

## வேலோடுமலை ஆலயத்துக்கு படகுப்பாதை வழங்கிவைப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**



ஈழத்துப் பழனி என்று அழைக்கப்படும் கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள், சித்தாண்டி சந்தனமடு ஆற்றைக் கடந்து செல்வதற்கு உதவியாக அந்த ஆலயத்துக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான படகுப்பாதை ஏறாவூர் பிரதேச சபையினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சர்வாவின் வழிகாட்டலின் கீழ் முன்னாள் உறுப்பினர்களான கே.துரைரெத்தினம், எஸ். திருநாவுக்கரசு ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைய சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலயத்தின் தலைவர் சு.தியாகராசாவிடம் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷினால் இப்படகுப்பாதை கடந்த வெள்ளிக்கிழமை (24) கையளித்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் சித்தாண்டி சந்தனமடு ஆற்றின் ஊடாக வள்ளங்களில் பொதுமக்கள் பயணித்து வந்ததுடன், இப்பயணம் அவர்களுக்கு பாதுகாப்பற்றதாகவும் அமைந்தது.

# மலைச்சாரல்



## பாடசாலை மாணவர்களுக்கு மனையியல் பாட செயலமர்வு



கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டாம் கட்டமாக கல்வி அமைச்சின் தொழில்நுட்பவியல் பிரிவு நெஸ்ட்லே நிறுவனத்துடன் இணைந்து மனையியல் பாட (Home Science) தொடர்பான செயலமர்வுகளை நடாத்திவருகின்றது.

சாதாரண தரம் மற்றும் உயர்தர மனையியல் பாட மாணவர்களுக்காக இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நானுஓய நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்திலும்,ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியிலும் இச்செயலமர்வுகள் அண்மையில் நடைபெற்றது.

இச்செயலமர்வுகளில் பல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்களும், துறைசார் ஆசிரியைகளும் கலந்து பயனடைந்தனர். அத்தோடு 50ற்கும் மேற்பட்ட போட்டிகளில் தெரிவான மாணவர்களுக்கு பரிசில்களும், துறைசார் ஆசிரியர்களுக்கு வழிகாட்டி நூல்களும், மூன்று பாடசாலைகளுக்கும் எரிவாயு அடுப்புகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இச்செயலமர்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கலந்துசிறப்பித்தார்.

## பேட்ரோ தேயிலைத்தோட்டத்துக்கு அமெரிக்க தூதுவர் விஜயம்



நுவரெலியாவிலுள்ள பேட்ரோ தேயிலைத் தோட்டத்துக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி செங்கை பிரத்தியேகமான சுற்றுப்பயணமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார். இவ் விஜயம் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர் செங் "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பிராந்தியத்தின் வெற்றிக்கு தேயிலை கைத்தொழில் முக்கிய பங்காற்றுகிறது. பொருளாதார நெருக்கடியின் சவால்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது பற்றிய எதிர்கால தொலைநோக்கு பார்வையை ஆராய்வதற்காக ஹேய்லிஸ் பெருந்தோட்டத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிராந்திய முகாமையாளரை நான் சந்தித்தேன்."இவ்விஜயத்தின் போது ஹேய்லீஸ் பெருந்தோட்ட நிர்வாகப் பணிப்பாளர் ரொசான் ராஜதுரை மற்றும் குழுவினர் அங்கு மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து தெளிவுபடுத்தினர்.

ஹேய்லிஸ் பெருந்தோட்டம் தனது பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதற்கு தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள சவால்கள், தனித்துவமான நலத் திட்டங்கள் தொடர்பாக இதன் போது விளக்கமளித்தது.

## உணவகங்களில் திடீர் சோதனை

**கம்பளை நிருபர்**

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சாலையோரங்களில் உணவுப் பொருட்கள் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளமையால் பொது சுகாதார ஆய்வாளர்கள் சாலையோரங்களில் சோதனை நடாத்த ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, கம்பளை நகரின் நடைபாதைகளிலும் நுவரெலியா வீதியின் இருபுறங்களிலும் உள்ள உணவுக் கடைகள், உணவகங்கள் மற்றும் ஏனைய கடைகள் என்பன சோதனையிடப்பட்டன.

சாலையோரங்களில் உள்ள உணவுப் பொருட்களை தூசி தட்டுதல், பாத்திரம் கழுவ தண்ணீர் இல்லாமை, அசுத்தம், உணவுகளை சரியாக பேக் செய்யாமை போன்ற பல தவறுகள் குறித்து கடைக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கம்பளை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மாகாண சுகாதார வைத்தியப் பகுதியின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

## 13 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை ; சந்தேகநபர் கைது

வத்தேகம பிரதேசத்தில் 13 வயது பாடசாலை மாணவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பன்விலவை வசிப்பிடமாகக் கொண்ட 55 வயதான நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவன், தனியார் வகுப்புக்குச் சென்று தன்னுடைய வீட்டுக்கு மாலை வேளையில் திரும்பிக் கொண்டிருந்த போது, மாணவனை ஏமாற்றி, கொங்கிரீட் தயாரிக்கும் இடத்துக்கு சந்தேக நபர் அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு முயற்சித்ததாக குற்றம்சாட்டியுள்ளார். மாணவன் ஒருவழியாக சந்தேகநபரிடமிருந்து தப்பித்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சந்தேகநபருக்கு மாணவனை ஒத்த வயதில், பேரன் இருப்பதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.




நுவரெலியா பிலின்கிபோனி பகுதியில் 20 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் ஸ்ரீ சிகரம் அமைப்பினரால் வழங்கி வைக்கப்பட்டன. பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இவ்வமைப்பின் தலைவி அகிலா கைலைநாதனினால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.
(படம்: நுவரெலியா நிருபர்)







மாத்தளை கல்வி வலயத்துக்குட்பட்ட கவுடுபெலல்ல கலைமகள் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் எஸ்.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக மாத்தளை வலயக் கல்வி பணிப்பாளர் ஜே.எம். இக்பால்,வலய முஸ்லிம் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் எம்.ஆர்.யு. ரில்வான், மாத்தளை கோட்டக்கல்வி பணிப்பாளர் மோனிகா தாமஸ், ஆங்கில பாட இணைப்பாளர் பி. பிரகாஷ், கிறிஸ்தவ பாட ஆலோசகர் பன்னீர்செல்வம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# நகர்வலம்



## தாயை கழுத்து நெரித்து கொலை செய்த மகன்

### 08 வருடங்களின் பின் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கெப்பித்திக்கொல்லாவ பகுதியில் தனது தாயின் கழுத்தை நெரித்து கொலை செய்த மகனொருவரை எட்டு வருடங்களுக்கு பின்னர் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். குறித்த நபர் 2015 ஆம் ஆண்டு தனது தாயின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அவர் இறுதி யுத்தத்தின் போது தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

32 வயதான இவர் கட்டுநாயக்க பகுதி இராணுவ முகாமில் கடமையாற்றுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## புத்தளம் கல்வி வலய பாடசாலைகளுக்கு சீருடை, பாடப்புத்தகம் வழங்கும் நிகழ்வு

### அதிதியாக அலிசப்ரி ரஹீம் எம்.பி பங்கேற்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அவற்றை வழங்கும் பிரதான நிகழ்வு புத்தளம் ஆனந்தா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச். எம்.அர்ஜுனவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், புத்தளம் மற்றும் கல்பிட்டி பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவரும், கல்வி அமைச்சரின் புத்தளம் மாவட்ட தமிழ் மொழி பாடசாலைகளுக்கான இணைப்பாளருமான அலி சப்ரி



ரஹீம் கலந்து கொண்டார். இதில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், தான் அரசியலுக்கு வருவதற்கு முன்பிருந்தே தனது BCMH என்னும் தொண்டு நிறுவனத்தின் மூலம் மாணவர்களுக்கு பாடப் பைகள் மற்றும் அப்பியாச புத்தகங்களை வழங்கி வருவதாகவும், இம்முறையும் தேவையுடைய மாணவர்களுக்கு வழங்குவதற்காக 10,000 புத்தகப் பைகளும் 10,000 அப்பியாச கொப்பிகளும் அடுத்த மாதம் அளவில் வழங்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

## சீனத்தூதரகத்தினால் உலருணவுப் பொதிகள் அன்பளிப்பு



(தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

இலங்கையில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சகல இன மக்களுக்கும் வழங்கும் வகையில் சீன நாட்டில் வாழும் பௌத்த சங்கத்தினர் 55 ஆயிரம் உலர் உணவுப் பொதிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர். முதல் கட்டமாக 600 உணவுப் பொதிகள் (ஒவ்வொறு பொதியும் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள்) வழங்கும் வைபவம் கொள்ளுபிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்றது. சீனத்தூதுவரினூடாக இப்பொதிகள் கொள்ளுப்பிட்டி பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனத்திற்கு வழங்கி விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, சீனத் தூதுவர் உட்பட தூதரக அதிகாரிகள், கொள்ளுப்பிட்டி பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் றிசான் ஹூசைன், கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் தலைவர் கலீல் ஹாஜியார் ஆகியோர் இதனை பகிர்ந்தளித்தனர்.

## ஜாதகப் பொருத்தம்



இலங்கையில் பல்வேறு மேடை நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்ட ஓர் அமைப்பு வெள்ளிநிலா கலாலயம். இந்த அமைப்பை அமைத்து பல மேடை நாடகங்களை தயாரித்து, இயக்கி, நடித்து, மேடை ஏற்றி வெற்றி கண்ட தம்பதிகள் ஆர். ராஜசேகரன், ஹெலன்குமாரி தம்பதிகள். இவ்வாறு மேடை நாடகங்கள் பல மேடை ஏற்றி வெற்றி கண்ட தம்பதிகள் நடிக்கும் நாடகம் ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 3.30, மாலை 6.30 மணிக்கு கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இயக்குனரும் இசையமைப்பாளருமான டொக்டர் ஷெல்டன் மிதுன் குலசூரியவின் இதே நாடகம் சிங்கள மொழியில் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் இதே மண்டபத்தில் மேடையேற்றப்படும்.

ஜாதகப் பொருத்தம் என்ற இந்த நாடகத்தில் ஆர். ராஜசேகரன், ஹெலன்குமாரி, சாந்தி பானுஷா, மல்லிகா கீர்த்தி, சுதாகர், ஆர். கணேஸ், ஆர். சசிகுமார், பொன். பத்மநாதன், எஸ். சரவணா, சுதாகர், வீரபுஷ்பநாதன், ஐ.ஜே. ஜேசுதாசன், கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோர் நடிக்கவுள்ளனர். இந்த நாடகத்துக்கு இயக்குனரும் இசையமைப்பாளருமான டொக்டர் ஷெல்டன் மிதுன்குலசூரிய இயக்கி தயாரிக்கவுள்ளார்.

## காலுகுமாரி ரயில் மோதி ஆட்டோ விபத்து; இருவர் காயம்

### வாதுவை பாதுகாப்பற்ற கடவையில் சம்பவம்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



கொழும்பு மருதானை நோக்கிப் பயணித்த காலுகுமாரி கடுகதி ரயில் மோதி முச்சக்கர வண்டியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் பயணித்த இரண்டு பெண்கள் காயமடைந்த நிலையில் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

வாதுவை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தல்பிடிய பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையிலேயே இவ்விபத்து நேற்று (27) இடம்பெற்றுள்ளது. முச்சக்கர வண்டியில் பயணித்த இரண்டு பெண்களும் சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்காக தல்பிடிய சமுர்த்தி வங்கிக்கு சென்று கொண்டிருந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

விபத்து தொடர்பில் வாதுவை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## எவோட்ஸ் – 2023 சிறுகதைப் போட்டி

கடந்த 18 ஆண்டுகளாக புதிய அலை கலை வட்டம் நடத்தி வரும் எவோட்ஸ் கலை கலாசார போட்டி தொடரில் இவ்வாண்டுக்கான இரண்டாவது போட்டியாக சிறுகதைப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகள்

பின்வருமாறு..

1) தமக்கு விருப்பமான கருப்பொருளில் சிறுகதையைஎழுதலாம்

2)ஒருவர் ஒரு பிரதியை மட்டுமே அனுப்ப முடியும்

3)இக் கதை முன்னர் எத்தகைய ஊடகங்களிலும் வெளிவந்ததாக இருக்கக்கூடாது.

4) ஒவ்வொரு சிறுகதையும் 550 சொற்களுக்கு குறையாமலும் 1250 சொற்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

5) அனுப்பபடும் சிறுகதை கட்டாயமாக பாமினி பென்டில் ரைப் செய்யப்பட்டு அனுப்பி வைக்கபடவேண்டும்.

6) சிறுகதையை puthiyaalai kalaivaddam1980@gmail.com என்ற மெயில் முகவரிக்கும் மற்றும் 075 4880172 என்ற வட்சப் இலக்கத்திற்கும் அனுப்பி வைக்கலாம்.

7) சிறுகதையை வரும் 22.04.2023 முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

8)முடிவுகள் மே மாதம் மேற்பகுதியில் அறிவிக்கப்படும்.

9)இம்முறை பரிசளிப்பு

மூன்று போட்டிகளுக்கும் ஒன்றானதாக நடத்தப்படும்.

பரிசு விபரங்கள் வருமாறு

முதலாம் பரிசு ரூபா 10 000, சான்றிதழ்.

இரண்டாம் பரிசு ரூபா 7 500, சான்றிதழ்

மூன்றாம் பரிசு ரூபா 5 000, சான்றிதழ்.

மேலதிக விபரங்களை பெற

076 2002701, 077 6274099,077 7412604,077 7111905

## மன்னார் நானாட்டான் பிரதேச வீதிகள்

## கனரக வாகனங்களால் சேதம் கிராம மக்கள் குற்றச்சாட்டு



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மடுக்கதை கிராமத்தில் அகழப்படும் மணல் கனரக வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்படுவதால் வீதிகள், சிறிய பாலங்கள் சேதமடைந்து வருவதாக மடுக்கரை மற்றும் இராசமடு கிராமமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வீதிகளின் ஊடாக மணல் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள் செல்வதால் பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக அபிவிருத்தி எதுவும் காணாத இவ்வீதி தற்போது பெரும் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய சூழலில் அடிக்கடி கனரக வாகனங்கள் பெரும் பாரத்துடன் சென்றுவருவதால் வீதி சேதமடைந்துவருகின்றது.

பொருளாதார நெருக்கடியான காலத்தில் கூட பெருந்தொகை பணத்தை செலவு செய்து அரசாங்கம் வீதிகளை புனரமைக்கும் போது மறுபுறம் முறையற்ற அனுமதிப்பத்திரங்களை பெற்று வீதிகளை சேதமாகிவருகின்றனர். இதனால் குண்டும் குழியுமான வீதிகளின் ஊடாகவே பொதுமக்கள் தினமும் பயணிக்கின்றனர்.

இவ்வீதிகளில் கனரக வாகனங்கள் செல்லவேண்டாம் என்ற அறிவித்தல் பலகைகள் எதுவும் அமைக்கப்படவில்லையென குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே இவ்வீதிகள் ஊடாக கனரக வாகனங்கள் மணல் ஏற்றிச் செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்தி பொதுமக்களுக்காக வீதிகளை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம்

வவுனியா விசேட நிருபர்



குறைந்த வருமானம் பெறும் 37,715 குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'நெல் கொள்வனவு மற்றும் நெல் இருப்பினை விடுவிக்கும்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (26.03) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி காத்திருப்போர் பட்டியல், முதியோர்கள், சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவைக்குட்பட்டோர் என தெரிவு செய்யப்பட்ட 37,715 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது குடும்பமொன்றுக்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்கி வைக்கப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவிப் பிரதேச செயலாளர் ச.பிரியதர்சினி ஆகியோர் இணைந்து இதனை வழங்கி வைத்தனர்.

## 'ஈழத்து ஞானக்குழந்தை' விருது

யாழ்.விசேட நிருபர்



திருகுறள்களை கூறி அதற்கு விளக்கம் கொடுத்த ஐந்து வயது சிறுவனுக்கு ஈழத்து ஞானக்குழந்தை எனும் விருது வழங்கி வைக்கப்பட்டது.

உருத்திரசேனையின் ஏற்பாட்டில் திருவள்ளுவரின் திருவுருவ பட வெளியீடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் இடம்பெற்றபோதே இவ் விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அருணன் எனும் ஐந்து வயது சிறுவன் திருவள்ளுவரின் ஆதங்கம் எனும் கருப்பொருளில் திருக்குறள் மற்றும் அதன் விளக்கம் என்பவற்றை எடுத்துரைத்து காட்டினான்.

# வடக்கின் உதயம்

## ஊடகப் படைப்பாக்கப் போட்டிகளில் யாழ். பல்கலைக்கு முதலிடம்



யாழ்.விசேட நிருபர்

அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற ஊடகப் படைப்பாக்கப் போட்டிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை முதலிடத்தைக் பெற்றுள்ளது. 8 பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், நாற்பது இடங்களில் 25 இடங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறை வென்று சாதனை படைத்துள்ளது.

ஹெல்வெற்றாஸ் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையில், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் உதவியுடன் நடைபெற்ற இப்போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பன பங்குபற்றியிருந்தன.

துறைசார் நிபுணர்களாலும், ஊடகத் தொழில்வாண்மையாளர்களாலும் சுமார் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, நான்கு பல்கலைக்கழகங்களிடையே இப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. பல்லூடகக் கட்டுரைகள், வலைப்பூக்கள், மொபைல் புகைப்படங்கள், டிஜிட்டல் கமெரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள், மொபைல் வீடியோ கதை சொல்லல், குறும் படங்கள், டிஜிட்டல் நாடகங்கள் ஆகிய எட்டு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் தலா ஐந்து போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாமிடங்களையும், 6 போட்டிகளில் மூன்றாமிடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் வெற்றி கொண்டனர்.

ஒவ்வொரு பிரிவிலும் 5 இடங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் டிஜிட்டல் கமெரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் அனைத்து இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களே கைப்பற்றிக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்பில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வுகளில் நேரடியாகப் பங்குபற்றிய மாணவர்கள், தாம் பெற்ற விருதுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டனர்.

## வெடுக்குநாறி மலை விவகாரம்; யாழ். பல்கலை மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

யாழ். விசேட நிருபர்

வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்பாக நேற்று மதியம் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றது. இப்போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் 'வெடுக்குநாரி மலை, கச்சதீவு, நெடுந்தீவு எங்கள் சொத்து', 'இராணுவமே வெளியேறு', 'கடற்படையே வெளியேறு', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'தொல்பொருட் திணைக்களமே வெளியேறு' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## தந்தை செல்வாவின் ஜனன தினம்

யாழ்.விசேட நிருபர்

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்த தின நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையக மக்களின் மனித உரிமைகள் எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவை சமூக அபிவிருத்திக்கான நிறுவன இயக்குனர் பெரியசாமி முத்துலிங்கம் மேற்கொள்ளவுள்ளார்.

Dialog FINANCE

# டயலொக் பினான்ஸ் பீஎல்சீ
## நிதி அறிக்கை
## 2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

### இலாபம் / நட்ட அறிக்கை
**2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த காலத்திற்கு**

| முடிவுற்ற ஆண்டுக்கானது | இலங்கை ரூபா ஆயிரங்களில் 2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டு (கணக்காய்வு செய்த) | 2021 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டு (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 984,853 | 261,067 |
| வட்டி செலவினம் | (359,526) | (56,629) |
| **தேறிய வட்டி வருமானம்** | **625,327** | **204,438** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 17,908 | 6,399 |
| கட்டணம் மற்றும் தரகு செலவினம் | (2,792) | (1,185) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **15,116** | **5,214** |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம் | 947 | 406 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 26,190 | 3,741 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **667,580** | **213,799** |
| கடன்கள் மற்றும் முன்னேற்பாடு மற்றும் பிற நட்டங்களுக்கான இழப்பு செலவுகள் | | |
| தனிப்பட்ட சேதம் | (17,640) | (11,405) |
| கூட்டு சேதம் | (46,525) | 839 |
| ஏனையவை | (20,719) | 319 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **582,696** | **203,552** |
| பணியாளர் செலவுகள் | (208,444) | (123,319) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (46,250) | (43,256) |
| ஏனைய செலவுகள் | (212,729) | (109,529) |
| **நிதிச் சேவைகளின் பெறுமதிசேர் வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **115,273** | **(72,552)** |
| நிதிச் சேவைகள் மீதான வரி | (48,177) | (4,689) |
| **நிதிச் சேவைகளின் பெறுமதிசேர் வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **67,096** | **(77,241)** |
| இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப் பங்கு | - | - |
| **வரி முன்னரான இலாபம்/(நட்டம்)** | 67,096 | (77,241) |
| வருமான வரி (செலவீனம்) / மீள் திரம்பல் | - | - |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | **67,096** | **(77,241)** |
| **ஒரு பங்கிற்கான அடிப்படை இலாபம்/(நட்டம்) (ரூபா)** | **0.57** | **(0.70)** |

### அனைத்துமுள்ளடக்கிய வருமானக் கூற்று
**2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த காலத்திற்கு**

| முடிவுற்ற ஆண்டுக்கானது | இலங்கை ரூபா ஆயிரங்களில் 2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டு (கணக்காய்வு செய்த) | 2021 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டு (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | **67,096** | **(77,241)** |
| **ஏனைய விரிவான வருமானம், வரி நிகர** | | |
| இலாபம் அல்லது நட்டத்திற்கு மறுகட்டமைக்கப்படாத பொருட்கள் | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்கு முதலீடுகளின் நியாயப் பெறுமதியில் மாற்றங்கள் | 19 | 3 |
| ஊழியர்களுக்கான நலன்புரி பணிக்கொடையின் மீள் அளவீடுகள் | (198) | 1,779 |
| பிற விரிவான வருமானத்தில் ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 57 | (427) |
| காலப்பகுதிக்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம | (122) | 1,355 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **66,974** | **(75,886)** |

### நிதியியல் நிலைமைக் கூற்று
**2022 டிசம்பர் 31இல் திகதியில் உள்ளவாறு**

| திகதியில் உள்ளவாறு | இலங்கை ரூபா ஆயிரங்களில் 2022 டிசம்பர் 31 திகதியில் (கணக்காய்வு செய்த) | 2021 டிசம்பர் 31 திகதியில் (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 170,399 | 136,222 |
| வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடனான நிலைப்பாடு | 2,427,981 | - |
| மறுகொள்முதல் ஒப்பந்தம் மீதான முதலீடு | 288,795 | 194,641 |
| இலாபம் / நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | 2,866 | 1,919 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - குத்தகை | 322,924 | 154,464 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனையவை | 2,733,524 | 2,588,067 |
| ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பில் நிதி சொத்துக்கள் | 2,120 | 2,101 |
| தேய்மான செலவு அடிப்படையில் நிதியியல் முதலீடுகள் | 221,329 | 597,106 |
| ஏனைய சொத்துக்கள் | 46,730 | 33,981 |
| வருமான வரி திரும்பல்கள் | 6,255 | 6,255 |
| பயன்பாட்டு உரிமை சொத்து | 11,102 | 17,601 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 53,980 | 60,807 |
| புலனாகாத சொத்துக்கள் | 173,171 | 104,823 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் | 123,450 | 123,393 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **6,584,626** | **4,021,380** |
| **பொறுப்புக்கள்** | | |
| தேய்மான செலவின் ஊடாக நிதி பொறுப்புக்கள - வாடிக்கையாளர்கள் காரணமாக | 3,786,922 | 1,323,916 |
| குத்தகை பொறுப்புக்கள் | 13,833 | 20,142 |
| ஓய்வுபெற்றோர் பணிக்கொடை கடப்பாடுகள் | 8,989 | 7,258 |
| ஏனைய பொறுப்புக்கள் | 171,113 | 133,269 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **3,980,857** | **1,484,585** |
| **பங்கு மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 2,934,582 | 2,934,582 |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | 14,716 | 11,361 |
| ஏனைய விரிவான வருமான ஒதுக்கம் | 1,596 | 1,580 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (347,125) | (410,728) |
| **மொத்த பங்கு மூலதனம** | **2,603,769** | **2,536,795** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **6,584,626** | **4,021,380** |
| ஒரு பங்கிற்கான நிகர சொத்துக்கள் (ரூபா) | **22.18** | **21.61** |
| **தொடர்ச்சியான பொறுப்புகள் மற்றும் கடமைகள்** | 505,052 | 378,648 |

*குறிப்பு: கூறப்பட்ட தொகைகள் சேதம் மற்றும் தேய்மானத்தின் நிகரத்தில் உள்ளன.*

### தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிக்காட்டிகள்
**2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு**

| உருப்படி | 2022 டிசம்பர் 31 திகதியில | 2021 டிசம்பர் 31 திகதியில் |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதனம் போதுமை** | | |
| கரு மூலதனம் (படி I மூலதனம்), ரூபா '000 | 2,535,216 | 2,552,228 |
| அடுக்கு I மூலதனம் (மாற்றங்களுக்கு பிறகு), ரூபா '000 | 2,265,338 | 2,324,210 |
| மொத்த மூலதனம், ரூபா '000 (அடுக்கு I மூலதனம், அடுக்கு II மூலதனம்) | 2,265,338 | 2,324,210 |
| கரு மூலதன போதுமை விகிதம், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் (ஆகக்குறைந்த மூலதன போதுமை- 2022: 8.5% 2021: 7%) | 46.36% | 60.21% |
| மொத்த மூலதன போதுமை விகிதம், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் (ஆகக்குறைந்த மூலதன போதுமை - 2022: 12.5% 2021: 11%) | 46.36% | 60.21% |
| மூலதன நிதி : வைப்புப் பொறுப்புக்கள் விகிதம் (ஆகக்குறைந்த போதுமை வீதம் 10%) | 68.76% | 191.61% |
| **சொத்துக்களின் தரம் (கடன்களின் தரம்)** | | |
| மொத்த செயற்படா முற்பணங்கள், ரூபா '000 | 42,249 | 66,753 |
| மொத்த செயற்படா முற்பணங்கள் வீதம், % | 1.32% | 2.35% |
| தேறிய செயற்படா முற்பணங்கள் வீதம், % | 0.28% | 0.29% |
| **இலாப இயலுமை (%)** | | |
| வட்டி மிகை | 10.99% | 6.94% |
| சொத்துக்களின் மீதான வருவாய் (வரிக்கு முன்னர்) | 1.03% | -2.24% |
| பங்கு மீதான வருவாய் (வரிக்கு பின்னர்) | 2.61% | -3.52% |
| **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை (ரூபா "000)** | | |
| தேவையான குறைந்தபட்ச திரவச்சொத்துக்களின் அளவு | 395,858 | 147,046 |
| இருப்பிலுள்ள திரவச்சொத்துக்களின் அளவு | 3,068,055 | 969,040 |
| தேவையான குறைந்தபட்ச அரச பிணையங்களின் அளவு | 85,427 | 71,618 |
| இருப்பிலுள்ள அரச பிணையங்களின் அளவு | 535,348 | 797,139 |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 85 | 69 |
| கிளைகளின் எண்ணிக்கை | 02 | 02 |
| சேவை நிலையங்களின் எண்ணிக்கை | - | - |
| அடகு நிலையங்களின் எண்ணிக்கை | - | - |

**அத்தாட்சிப்படுத்துகை :**

டயலொக் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்தைச் சேர்ந்த நிதி முகாமையாளர் மற்றும் பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரி ஆகிய நாங்கள் கீழ் கையொப்பமிட்டு கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆ) இக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரதி செய்யப்பட்ட உண்மையான தகவல்களாகும். எனினும், இது, கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது என மேலே குறிப்பிடப்பட்டால் அது கருத்திற் கொள்ளப்படத் தக்கதாகும்.

(ஒப்பம்)
நிதி முகாமையாளர்
09 பிப்ரவரி 2023

(ஒப்பம்)
தலைமை நிருவாக அதிகாரி
09 பிப்ரவரி 2023

(ஒப்பம்)
பணிப்பாளர்
09 பிப்ரவரி 2023

(ஒப்பம்)
பணிப்பாளர்
09 பிப்ரவரி 2023

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்துறை வர்த்தகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதி நிர்ணய சபையினால் அனுமதியளிக்கப்பட்டது.
கூட்டிணைப்புத் திகதி - 1981 நவம்பர் 25

pwc

## Independent auditor's report
To the Shareholders of Dialog Finance PLC

*Report on the audit of the financial statements*

**Our opinion**
In our opinion, the accompanying financial statements give a true and fair view of the financial position of Dialog Finance PLC ("the Company") as at 31 December 2022, and of its financial performance and its cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.

**What we have audited**
The Company's financial statements comprise:
- the statement of financial position as at 31 December 2022;
- the statement of profit or loss and other comprehensive income for the year then ended;
- the statement of changes in equity for the year then ended;
- the statement of cash flows for the year then ended; and
- the notes to the financial statements, which include a summary of significant accounting policies and other explanatory information.

**Basis for opinion**
We conducted our audit in accordance with Sri Lanka Auditing Standards (SLAuSs). Our responsibilities under those standards are further described in the Auditor's responsibilities for the audit of the financial statements section of our report.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Independence**
We are independent of the Company in accordance with the Code of Ethics for Professional Accountants issued by the Institute of Chartered Accountants of Sri Lanka ("CA Sri Lanka Code of Ethics"). We have fulfilled our other ethical responsibilities in accordance with the CA Sri Lanka Code of Ethics.

**Key audit matters**
Key audit matters are those matters that, in our professional judgment, were of most significance in our audit of the financial statements of the current period. These matters were addressed in the context of our audit of the financial statements as a whole, and in forming our opinion thereon, and we do not provide a separate opinion on these matters.

| Key audit matter | How our audit addressed the key audit matter |
|---|---|
| **Impairment of loans and advances**<br><br>**Refer to the accounting policy Section 5.3: Impairment of financial assets and Notes 10 and 22 to the financial statements.**<br><br>As at 31 December 2022, total gross amount of loans and advances amounted to LKR 3,056 million, with a total allowance for impairment of LKR 125 million. Total net amount of loans and advances contribute 47% to the total assets.<br><br>Management assesses whether the credit risk of loans and advances to customers have increased significantly since their initial recognition and applies a three-stage impairment model to calculate their ECL. ECL is calculated on either an individual basis or a collective basis. Collective impairment is calculated incorporating key parameters, including probability of default, loss given default, exposure at default and discount rates. Individual impairment is determined using discounted cash flows:<br><br>The impairment of loans and advances using the ECL model was considered as a key audit matter due to factors such as:<br>- The ECL model involves complex calculations with key variables used in the model requiring significant management judgment and use of assumptions.<br>- The magnitude of the reported amounts of loans and advances to customers and the impairment allowances thereof.<br>- The determination of expected loss rates in an uncertain economic environment. | The audit procedures performed to assess the adequacy of the impairment allowance for credit losses on loans and advances to customers in line with SLFRS 9 adopted, included the following:<br>- Understanding, evaluating and testing the design and operating effectiveness of key controls in the lending and credit risk mitigation process including information systems;<br>- Assessing the appropriateness of the criteria used by management to determine whether customer credit facilities are impaired;<br>- Assessing the appropriateness of the design and implementation of the ECL model, including the reasonableness of significant judgement made and assumptions used by management;<br>- Checking the reasonability of the macro-economic and other forward-looking information used by management, by comparing them against reliable publicly available information;<br>- For loans and advances individually impaired, assessing the reasonability on a sample basis, future cash flows forecasted by management and the discount rates supporting the loss allowance computation;<br>- Checking the underlying calculations and data on a sample basis for accuracy and completeness;<br>- Assessing the accuracy and sufficiency of related disclosures. |

**Other information**
Management is responsible for the other information. The other information comprises the information included in the Annual Report for the year ended 31 December 2022 ("the Annual Report") (but does not include the financial statements and our auditor's report thereon). The Annual Report is expected to be made available to us after the date of this auditor's report.

Our opinion on the financial statements does not cover the other information and we do not express any form of assurance conclusion thereon.

In connection with our audit of the financial statements, our responsibility is to read the other information identified above and, in doing so, consider whether the other information is materially inconsistent with the financial statements or our knowledge obtained in the audit, or otherwise appears to be materially misstated.

When we read the Annual Report, if we conclude that there is a material misstatement therein, we are required to communicate the matter to those charged with governance.

**Responsibilities of management and those charged with governance for the financial statements**
Management is responsible for the preparation of the financial statements that give a true and fair view in accordance with Sri Lanka Accounting Standards and for such internal control as management determines is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Company's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Company or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Company's financial reporting process.

**Auditor's responsibilities for the audit of the financial statements**
Our objectives are to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with SLAuSs will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with SLAuSs, we exercise professional judgment and maintain professional scepticism throughout the audit. We also:
- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.
- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company's internal control.
- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by management.
- Conclude on the appropriateness of management's use of the going concern basis of accounting and, based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Company's ability to continue as a going concern. If we conclude that a material uncertainty exists, we are required to draw attention in our auditor's report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify our opinion. Our conclusions are based on the audit evidence obtained up to the date of our auditor's report. However, future events or conditions may cause the Company to cease to continue as a going concern.
- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

We communicate with those charged with governance regarding, among other matters, the planned scope and timing of the audit and significant audit findings, including any significant deficiencies in internal control that we identify during our audit.

We also provide those charged with governance with a statement that we have complied with relevant ethical requirements regarding independence, and to communicate with them all relationships and other matters that may reasonably be thought to bear on our independence, and where applicable, related safeguards.

From the matters communicated with those charged with governance, we determine those matters that were of most significance in the audit of the financial statements of the current period and are therefore the key audit matters. We describe these matters in our auditor's report unless law or regulation precludes public disclosure about the matter or when, in extremely rare circumstances, we determine that a matter should not be communicated in our report because the adverse consequences of doing so would reasonably be expected to outweigh the public interest benefits of such communication.

**Report on other legal and regulatory requirements**
As required by section 163 (2) of the Companies Act, No. 07 of 2007, we have obtained all the information and explanations that were required for the audit and, as far as appears from our examination, proper accounting records have been kept by the Company.

PricewaterhouseCoopers

**CHARTERED ACCOUNTANTS**
**CA Sri Lanka membership number: 2857**

**COLOMBO**
**09 February 2023**

*PricewaterhouseCoopers, P. O. Box 918, 100 Braybrooke Place, Colombo 2, Sri Lanka*
*T: +94 (11) 771 9700, 771 9838, F: +94 (11) 230 3197, www.pwc.com/lk*

**Partners** **D T S H Mudalige FCA, C S Manoharan FCA, Ms S Hadgie FCA, N R Gunasekera FCA, T U Jayasinghe FCA, H P V Lakdeva FCA, M D B Boyagoda FCA, Ms W D A S U Perera ACA, Ms L A C Tillekeratne ACA, K M D R P Manatunga ACA**

PricewaterhouseCoopers is a member firm of PricewaterhouseCoopers International Limited, each member firm of which is a separate legal entity.

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :** இல. 475, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. **தொலைபேசி: 0114 317 317**
கடன் மதிப்பீடு AA (lka) RWN

www.skillsads.com

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை

## மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்களின் வழங்கல்

பின்வரும் 2023 - மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்களின் வழங்கல் மற்றும் நிறுவலுக்காக 2023.04.18ஆம் திகதி மு.ப. 10.00 வரை முதன்மை நிறுவனம் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் இருந்து திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

MEDICAL & OFFICE EQUIPMENTS-2023

| Items No. | | Items | Qty | Non Refundable |
|---|---|---|---|---|
| Group I | 1.1 | Steel Cupboard | 07 | 1,000.00 |
| | 1.2 | Steel Almirah with Glass | 19 | |
| | 1.3 | Cupboard | 03 | |
| | 1.4 | Executive Table | 04 | |
| | 1.5 | Office Table | 42 | |
| | 1.6 | Plastic Chair | 310 | |
| | 1.7 | Ordinary Chair | 36 | |
| | 1.8 | Bench with Back Rest (1X4) | 10 | |
| | 1.9 | Revolving Chair | 32 | |
| | 1.10 | Computer Table | 10 | |
| Group II | 2.1 | Air Conditioner | 05 | 1,000.00 |
| | 2.2 | Refrigerator | 03 | |
| Group III | 3.1 | Portable Spirometer | 01 | 1,000.00 |
| | 3.2 | Treadmill | 01 | |
| | 3.3 | Infrared Lamp | 01 | |
| | 3.4 | Wax Bath | 01 | |
| | 3.5 | Quadriceps Hamstring Bench | 01 | |
| | 3.6 | Ultra Sound Therapy | 01 | |
| Group IV | 4.1 | Ambubag Pediatric | 01 | 1,000.00 |
| | 4.2 | Diagnosis Set | 01 | |
| | 4.3 | ETU Beds | 09 | |
| Group V | 5.1 | Air Motor | 03 | 1,000.00 |
| | 5.2 | Autoclave | 02 | |
| | 5.3 | Examination Lamp | 02 | |
| Group VI | 6.1 | Micro Motor | 02 | 1,000.00 |
| | 6.2 | Ultra Sonic Scale | 01 | |
| | 6.3 | Light Curing Machine | 01 | |
| Group VII | 7.1 | Drug Trolley | 08 | 1,000.00 |
| | 7.2 | Dressing Trolley | 01 | |
| | 7.3 | Dental Revolving Stool | 01 | |
| | 7.4 | Ward Round Trolley | 05 | |
| | 7.5 | Instrument Trolley | 06 | |
| | 7.6 | Emergency Trolley | 06 | |
| | 7.7 | Wheel Chair | 08 | |
| | 7.8 | Stretcher | 04 | |
| | 7.9 | Bed Side Locker | 18 | |
| | 7.10 | Bedside Screen | 09 | |
| | 7.11 | Medicine Rack | 06 | |
| Group VIII | | **Fire Extinguisher** | | 1,000.00 |
| | 8.1 | - 2kg $CO_2$ | 50 | |
| | 8.2 | 6kg ABC Dry Powder | 40 | |
| | 8.3 | - 9 liter Water | 60 | |
| Group IX | 9.1 | RO Plant | 05 | 1,000.00 |
| Group X | | **Personal Medical Record Book** | | 1,000.00 |
| | 10.1 | Female | 10,000 | |
| | 10.2 | - Male | 4000 | |
| Group XI | | **Network expansion for implementing the Digital OPD & Maintenance at BH Kinniya** | | 1,000.00 |
| | 11.1 | Manageable switch | 01 | |
| | 11.2 | Wireless Access Point | 01 | |
| | 11.3 | Wall Mount Date Rack (10U) | 01 | |
| | 11.4 | UTP Patch Panel-24 Port | 10 | |
| | 11.5 | Cable Management Panel | 01 | |
| | 11.6 | 1.5 KVA Line Interactive UPS | 01 | |
| | 11.7 | 3 KVA Online UPS | 01 | |
| | 11.8 | UTP Cable (CAT 6) Laying (Including Labour Installation Materials) | 350m (Approximate) | |

இரு பிரதிகளிலான விலைமனு ஆவணத்தை எந்த ஒரு ஆர்வமுடைய தகுதி கொண்ட விலைமனுதாரர், முகவர் அல்லது பரிந்துரைக்கப்பட்டவரால் பின்வருவனவற்றை சமர்ப்பித்து மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00க்கு இடையே 2023.03.28 ஆம் திகதி தொடக்கம் 2023.04.17ஆம் திகதி வரை வேலை நாட்களில் திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இருந்து பெற முடியும்.

- திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்று
- திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், மக்கள் வங்கி திருகோணமலை, நகரக் கிளையில் 255-100120000-490 என்ற கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப்பணமாக செலுத்துதல்
- வர்த்தகப் பதிவுச்சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி
- பிரதான நிறுவனம் மூலம் உங்களது நிறுவனம் அவர்களின் உற்பத்திகளுக்காக உள்ளூர் நிறுவனமாக பணியமர்த்தப்பட்டதற்காக வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ்/கடிதம்

1. உருப்படிகளின் ஒவ்வொரு குழுவுக்காகவும் விலைமனு ஆவணத்தை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
2. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.04.18ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, பிராந்திய பெறுகைக் குழு, தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையில் குழு பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.
3. அனைத்து விலைமனுக்களும் 2023.07.03ஆம் திகதி வரை செல்லுபடியானதும் மொத்த விலைமனு பெறுமதியின் 2% இனை கொண்டதுமான விலைமனு பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. ஏதேனும் தெளிவு பெற வேண்டுமாயின் 026-2220103 என்ற இலக்கத்திற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இருந்து பெறலாம்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை**
**திருகோணமலை**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனு தாரர் / கேள்வி தாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ ME/ ML/50 /2023 | கொழும்பு நகரத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களின் வாகனத் தரிப்பிடத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான குத்தகை | 5,750.00 | ஒவ்வொரு அமைவிடத்திற்கும் ரூபா 15,000.00 | ஆர்வமுள்ள நபர்கள்/ நிறுவனங்கள் / நிறுவகங்கள் | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

I. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04,
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
  மாளிகாகந்த, கொழும்பு 10.

II. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

III இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-04-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023-04-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.11.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.10.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-04-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2023-04-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கேள்வி அறிவித்தல்

## காரைநகர் பிரதேசசபை

### பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (கடன் இலக்கம் 163305)

**சக்கலாவோடையில் கடைத் தொகுதி அமைத்தல் கட்டம் 01 – LDSP/NP/JAF/KRPS/2021/02 (RE)**

**Credit No: 163305**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, உலகவங்கியிடமிருந்து பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்திற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒருபகுதி கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்ட வேலைகளுக்கான புனரமைப்பு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர் பெறுகைக்குழு, காரைநகர் பிரதேச சபை, வடமாகாணம் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தராதரம் | கேள்வி கோரல் சமர்ப்பிக்கப்படும் இறுதி திகதியில் இருந்து செல்லுபடியாகும் காலம் | வேண்டப் படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| LDSP/NP/ JAF/KRPS/ 2021/02(RE) | சக்கலா வோடையில் கடைத் தொகுதி அமைத்தல் கட்டம் 01 | 8.998 | 90 நாட்கள் | C8,C7 &C6 (கட்டடம்) | 12.07.2023 | 90,000.00 | 09.08.2023 |

03. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் பெறுகைக் குழு காரைநகர் பிரதேசசபை, வலந்தலை எனும் முகவரியில் (தொலைபேசி : 021 225 2102, fax: 021 225 1735, மின்னஞ்சல்: karainagarps@gmail.com) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2023.04.25 ம் திகதி வரை காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.

06. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்பு பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், காரைநகர் பிரதேச சபை வலந்தலை எனும் முகவரியில் 2023.03.28ம் திகதியிலிருந்து 2023.04.25ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் செயலாளர், காரைநகர் பிரதேசசபை, வலந்தலை எனும் முகவரிக்கு 2023.04.26 ம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 11.04.2023 ம் திகதி பி.ப. 14.00 மணிக்கு காரைநகர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் பங்குபற்றலாம்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகை குழு,**
**காரைநகர் பிரதேச சபை, வடமாகாணம்.**
2023.03.28

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# விலைமனுக்கோரல்

## பொது பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை பொலிஸ்

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பொலிஸ் தலைமையகத்தின் கட்டிடப் பிரிவின் பணிப்பாளரிடம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | வேலைத்திட்டம். | செயற்திட்ட காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | மனுக்காப்புறுதிப் பிணைத்தொகை (ரூ.) | CIDA தர நிறுவனப் பதிவு | மீளச்செலுத்தப் படாத தொகை (ரூ). |
|---|---|---|---|---|---|---|
| 01 | மல்லாவி பொலிஸ் நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேலதிக பணிகளை நிறைவுசெய்தல் LA/B1/119/10 | 270 | 45.93 | 700,000.00 | C4,C5 அல்லது C6 மட்டும். (கட்டிடங்கள்) | 11,000.00 |
| 02 | மரதான பொலிஸ் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தில் இல H-12 காணப்படும் நிலையத்தில் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல். LA/B1/01/22 | 120 | 5.2 | 77,000.00 | C6 அல்லது C7 மட்டும். (கட்டிடங்கள்) | 3,500.00 |
| 03 | நாராஹேன்பிட்ட பொலிஸ் நிலைய-த்திற்கு மின்சார பெனல் அறையை அமைத்தல். LA/B1/34/21 | 119 | 13.7 | 205,000.00 | EM2 மற்றும் அதற்கு மேல் (கட்டிடங்கள்) (Electrical and Mechanical Services) | 8,000.00 க்கு |

01. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது. இந்த திட்டங்களுக்கு பொது நிதி சுற்றறிக்கை எண் 04/2016 (ii) விதிகள் பொருந்தும், மேலும் அந்த சுற்றறிக்கையின் விதிகளின்படி மாகாணத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட மனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. மேலே உள்ள அட்டவணையின் திட்டங்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டவை. அத்தகைய திட்டங்களுக்கான மனுக்களை கொள்வனவு செய்ய விரும்பும் மனுதாரர்கள் மனு திறக்கும் நேரத்தில் மனு ஆவணங்களுடன் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த PCA/03 சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

03. கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலக தொலைப்பேசி எண் **0112013184** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மனு ஆவணங்களை, வாரத்தில் அலுவலக நாட்களில் **2023.03.28** ஆம் திகதி முதல் **2023.04.20** வரை காலை **09.00** மணி முதல் மாலை **03.00** மணி நேரம் வரை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும். மீள் செலுத்தப்படாத கட்டணத்தை **பணிப்பாளருக்கு (கட்டிடம்)** செலுத்துவதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

04 மனுக்கள் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

05. மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து மட்டுமே பெற்றுக்கொண்ட "காவல் துறைத் தலைவர்" (IGP) என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை **2023.08.18** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **119 நாட்கள்** வரையாகும்).

06. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் 2023.04.21 ஆம் திகதி 1000** மணித்தியாலங்களுக்கு முன் **கொழும்பு 01 "பொலிஸ் தலைமையகம்" ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளர் (கட்டிடம்) அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழு சார்பாக,
பணிப்பாளர் (கட்டிடம்),
**பொலிஸ் தலைமையகம்,**
கொழும்பு 01.

# பெறுகை அறிவித்தல்

## ஜாஎல பிரதேச சபை

ஜாஎல பிரதேச சபைக்கு உரித்தான ராகம பேரலந்தவிற்கு அண்மையில் வாவியினூடாக அமையப் பெற்றுள்ள வீதியின் உடைந்து விழுந்துள்ள மதகை திருத்தி அமைப்பதற்காக மற்றும் ராகம போய்ஸ்டவுன் வீதியின் கபுவா வாவிக்கண்மையிலுள்ள மதகைத் திருத்தி அமைப்பதற்காக பின்வரும் அட்டவணையில் காணப்படும் தகைமைகளைப் பூரணப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.04.19 அன்று மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும்.

2023.04.17 அன்று பி.ப. 3.00 வரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதுடன் அதற்காகப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படும்.

கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தும் ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் என்பொழுதாவது அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையம் மற்றும் கேள்வியின் செல்லுபடிக் காலம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமைந்திருப்பதுடன் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து பிணையமாகனது செல்லுபடியாகுதல் வேண்டும். கேள்விப் பிணையமானது 'செயலாளர், ஜாஎல பிரதேச சபை' என்ற பெயரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுகையில் கேள்விகளை பிணையத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது மத்திய வங்கி அனுமதித்த அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற பிணையமொன்றாக இருத்தல் வேண்டும்.

கேள்விக்கான ஆவணங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு 'செயலாளர், ஜாஎல பிரதேச சபை, கந்தான' எனக்குறிப்பிட்டு செயற்றிட்டத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஜாஎல பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.04.19 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநதி ஒருவர் சமுகமளித்திருக்கலாம்.

ஏதேனும் விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் சபைக்கு அல்லது சபையின் செயலாளருக்கு உரித்தாகும்.

மேலதிக விபரங்களை தொலைபேசி இல. 011-2239566 இற்கு சபையின் செயலாளர் அல்லது வேலை அத்தியட்சகரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

| | செயற்றிட்டத் தின் பெயர் | தேவையான குறைந்த தகைமை | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணையம் ரூபா | பிணையத் தின் செல்லுபடிக் காலம் | வரியின்றி மதிப்பீட்டு செலவினம் ரூபா | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஜாஎல பிரதேச சபைக்கு உரித்தானராகம பேரலந்த அண்மையில் ஓடும் வீதியின் உடைந்த மதகை திருத்தி அமைத்தல் | C7 மற்றும் C6 | 10,000.00 | 95,000.00 | 95,000.00 | 60 நாட்கள் | 80,000,000.00 | 03 மாதங்கள் |
| 02 | ராகம போய்ஸ் டவுன் வீதியின் கபுவா வாவிக்கு அண்மையிலுள்ள மதகை திருத்தி அமைத்தல் | C7 மற்றும் C6 | 5,000.00 | 54,500.00 | 54,500.00 | 60 நாட்கள் | 4,000,000.00 | 03 மாதங்கள் |

**எல்.டப்ளியு.எல்.கே. லலித் தர்மசேன,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்,**
**கருமங்கள், செயற்பாடுகளை செயற்படுத்தும் அலுவலர்,**
**ஜாஎல பிரதேச சபை,**
**கந்தான.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/ PT/16/057 | Disaster Recovery (DR) Solution for Oracle E-Business Suite | 3, 000,000.00 | 35,000.00 | 2023.04.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு
### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்காக முன்தகைமைகளைக் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இல. | வேலையின் பெயர் | பொறியிலாளர் மதிப்பீட்டு பெறுமதி (வெட் இன்றி) (ரூ. மில்லியன் | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப் படாத கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/R-01/2023 | வஸ்கமுவ தேசிய பூங்காவின் கிரி ஓயபாதையை பழுது பார்த்தல் | 6.1 | C7 அல்லது அதற்கு மேல் (வீதி) | 2500.00 | 93000/- 2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 02 | WL/02/20/B-03/2023 | வவுனியா உதவிப் பணிப்பாளர் பணிமனை மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்த்தல் | 7.8 | C7 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 3000.00 | 120,000/- 2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 03 | WL/02/20/B/052023 | அலகொல்லேவ பீடு அலுவலகத்திற்கு மலசலகூட அமைப்பை நிர்மாணித்தல் | 3.2 | C8 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 1500.00 | 49,000/- 2023.07.19 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 04 | WL/02/20/B-04/2023 | பிம்புரன்னேவ இணைந்த உத்தியோகபூர்வ இல்லத்தை பழுது பார்த்தல் | 14.6 | C6 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 5,000.00 | 220,000/- 2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 05 | WL/02/20/B/06/2023 | மீகவேவ வன பாதுகாப்பு அலுவலக பழுது பார்த்தல் | 9.0 | C7 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 3500.00 | 135,000/- 2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 06 | WL/02/20/B/07/2023 | கல்கமுவ யானைக்கட்டுப் பாட்டு பிரிவின் அலுவலகத்தை பழுது பார்த்தல் | 5.6 | C7 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 2500.00 | 85,000/- 2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.04.18 வரை அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல, வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரிட்சித்துப் பார்க்கலாம்.

4. கேள்விகளை சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களால் கடந்த 06 மாத வங்கிக் கூற்று மற்றும் 05 வருடத்திற்குள் முடிவுறுத்தப்பட்ட அதற்குச் சமமான 02 வேலைகளை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் 10 மில்லியனுக்கு மேற்படும் வேலைகளுக்கு கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்கக் கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.04.18ம் திகதி வரை வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விடுக்கப்படும் எழுத்து மூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ளலாம்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்ட வளாகத்தை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேற்படி கேள்விப் பிணை ஓர் வங்கி மூலம் சமர்ப்பிக்கப்படுமாயின் தரப்பட்டுள்ள பெறுமதியை தரப்பட்டுள்ள தினம் வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும். அதனைக் காசாகச் செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல்வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான ஒப்பந்தங்களுக்காக கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA 03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2023.04.19 பி.ப. 2.30 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வன சீவராசிகள் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிட முடியும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளைத் திறத்தல் அன்றே (2023.04.19) பி.ப. 2.30 இற்கு இடம் பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

09. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்களை 011 2871537 தொலைபேசி இல. மூலம் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிதி) யை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன் இந்த அறிவித்தல் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இந்த பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

10. கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படும் எந்த செலவுகளுக்கும் தலைவர் திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு நேரடியாக முன்னேற கடைசி எதிர்பார்ப்பு

## நியூசிலாந்துடன் இன்று பலப்பரீட்சை



இலங்கை ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறுவதற்கான கடைசி வாய்ப்பை எதிர்பார்த்து நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இன்று (28) களமிறங்கவுள்ளது.

கிறைஸ்சேர்ச், ஹேக்லி ஓவல் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் பெரும் நெருக்கடியுடனேயே களமிறங்குகிறது. நியூசிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் 198 ஓட்டங்களால் படுதோல்வியை சந்தித்த இலங்கை அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை இழப்பதை தடுப்பதற்கு வெற்றி பெறுவது கட்டாயமாக உள்ளது.

அதேபோன்று முதல் போட்டியில் தோற்றதால் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறுவதில் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டிருக்கும் இலங்கை அதற்கான கடைசி வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள நியூசிலாந்துக்கு எதிரான எஞ்சிய இரு போட்டிகளிலும் வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

இதன்போது தென்னாபிரிக்க அணி எதிர்வரும் நெதர்லாந்துக்கு எதிரான இரண்டு ஒருநாள் போட்டியில் தோற்கும் பட்சத்தில் இலங்கை அணிக்கு இறுதிப் போட்டிக்கு நேரடியாக முன்னேற முடியும். இல்லாவிட்டால் வரும் ஜூன் மற்றும் ஜூலையில் சிம்பாப்வேயில் நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆட வேண்டி ஏற்படும்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் துடுப்பாட்ட வரிசை முழுமையாக பின்னடைவை சந்தித்த நிலையில் இன்றைய தினம் மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உள்ளது. குறிப்பாக மத்திய வரிசை வீரர் தனஞ்சய டி சில்வா முதல் போட்டியில் நீக்கப்பட்டதை ஒட்டி சர்ச்சைகள் எழுந்து வரும் நிலையில் அவர் இன்றைய தினம் களமிறக்கப்படுவது பற்றி எதிர்பார்ப்பு உள்ளது.

டி20 போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளராக இருந்தபோதும் வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து சோபிக்கத் தவறி வருகிறார். இலங்கை அணியின் வெற்றிக்கு அவர் திறமையை வெளிப்படுத்துவது முக்கியமாகும்.

பெரிய பௌண்டரி எல்லையைக் கொண்ட ஹேக்லி ஓவல் மைதானம் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருப்பதோடு குறைந்த ஓட்டங்களே வழக்கமாக பெறப்படுகின்றன. இன்று காலை மற்றும் நண்பகலில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக எதிர்வுகூறப்பட்டிருக்கும் நிலையில் போட்டி ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படலாம்.

எனினும் ஹேக்லி மைதனத்தில் இலங்கை அணி இதுவரை ஆடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்திருப்பதோடு அதுவும் அதிக இடைவெளியில் தோல்வி அடைந்துள்ளது.

## டி20இல் தென்னாபிரிக்கா உலக சாதனை வெற்றி



மேற்கிந்திய தீவுகள் நிர்ணயித்த டி20 சர்வதேச போட்டிகளின் அதிகூடிய வெற்றி இலக்கான 259 ஓட்டங்களை எட்டி தென்னாபிரிக்க அணி புதிய உலக சாதனை படைத்துள்ளது. செஞ்சூரியனில் ஞாயிறன்று (26) நடந்த போட்டியில் ஆரம்ப வீரர் குயின்டன் டி கொக் 44 பந்துகளில் 100 ஓட்டங்களை விளாசி தென்னாபிரிக்க அணி ஏழு பந்துகளை மிச்சம் வைத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 1–1 என சமன் செய்தது. முன்னதாக துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகளுக்காக ஜோன்சன் சார்ல்ஸ் 46 பந்துகளில் 118 ஓட்டங்களை பெற அந்த அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 259 ஓட்டங்களை பெற்றது. முன்னதாக கடந்த ஆண்டு செர்பியா நிர்ணயித்த இலக்கை 246 ஓட்டங்களை பெற்று எட்டியதே சாதனையாக இருந்தது.

## சம்பியனானது ஹிஜ்ரா அணி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக்கழகம் நடாத்திய “உயிர்நீத்த வீரர்களின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண” மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரில் ஹிஜ்ரா விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது. ஆரையம்பதி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (26) நடைபெற்ற இறுதிப் போட்டியில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகத்தை ஹிஜ்னா அணி வீழ்த்தியது. இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகள் கலந்துகொண்டன.

## ஆப்கான் அணிக்கு வரலாற்று வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் முதல் இரு போட்டிகளிலும் அடுத்தடுத்து வெற்றியீட்டிய ஆப்கானிஸ்தான் அணி அண்டை நாட்டுக்கு எதிராக முதல் முறை தொடர் ஒன்றை கைப்பற்றியுள்ளது.

ஷார்ஜாவில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அனுபவ வீரர்கள் இன்றி இளம் அணியுடன் களமிறங்கிய பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களை பெற்றது. இமாத் வசிம் ஆட்டமிழக்காது 67 பந்துகளில் 64 ஓட்டங்களை பெற்றார்.

பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி 19.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

## நியூசிலாந்து டி20 குழாம் அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான டி20 தொடருக்கான நியூசிலாந்து குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு ஆண்டுகளின் பின் டி20 சர்வதேச போட்டிகளுக்கு திரும்பும் டொம் லதம் அணித் தலைவராக செயற்படவுள்ளார். சாட் பொவஸ் மற்றும் ஹென்ரி ஷிப்லி இலங்கை தொடரில் தனது கன்னி போட்டியில் ஆட வாய்ப்பு உள்ளது.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் போட்டிகள் ஏப்ரல் 2, 5 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

**நியூசிலாந்து குழாம்:** டொம் லதம் (தலைவர், வி.கா), சாட் பொவஸ், மார்க் சப்மன், மட் ஹென்ரி, பென் லிஸ்டர், அடம் மில்னே, டரில் மிட்சல், ஜிம்மி நீஷம், ரச்சின் ரவிந்திரா, டிம் செய்பேர்ட், ஹென்ரி ஷிப்லி, இஷ் சோதி, வில் யங்.

## அருந்ததி இல்லம் முதலிடம்



மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் அருந்ததி இல்லம் முதலிடத்தை வென்றது.

கல்லூரி அதிபர் எம். பத்மநாபன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார், சிறப்பு அதிதியாக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவியுமான எஸ். சக்கரவர்த்தி ஆகியோர கலந்துகொண்டனர். இப்போட்டிகளில் இடம் பெற்ற அணிநடை, உடற்பயிற்சிக் கண்காட்சி, பேண்ட் வாத்தியம் ஆகியன அனைவரதும் கவனத்தை ஈர்த்ததுடன், முதலாம் இடத்தை அருந்ததி இல்லமும், இரண்டாம் இடத்தை நளாயினி இல்லமும், மூன்றாம் இடத்தை சாரதா இல்லமும் பெற்றுக் கொண்டன.

## ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க இலங்கை வீரர்களுக்கு சிக்கல்



பதினாறாவது இந்திய பிரீமியர் லீக் தொடர் வரும் வியாழக்கிழமை (31) ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை மற்றும் பங்காளதேஷ் வீரர்கள் பகுதி அளவு போட்டிகளில் பங்கேற்பது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் ஐ.பி.எல் அணிகள் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

இம்முறை ஐ.பி.எல் தொடரில் பங்களாதேஷின் ஷகீப் அல் ஹசன், லிட்டோன் தாஸ் மற்றும் முஸ்தபிஸுர் ரஹ்மான் ஆகிய மூன்று வீரர்களும் இலங்கையில் வனிந்து ஹசரங்க, மதீஷ பத்திரண மற்றும் மஹீஷ் தீக்ஷன, பானுக்க ராஜபக்ஷ ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இதில் நியூசிலாந்து சுற்றுப்பயணம் காரணமாக பானுக்க ராஜபக்ஷ தவிர்த்து இலங்கையின் மூன்று வீரர்களும் வரும் ஏப்ரல் 8 ஆம் திகதியே ஐ.பி.எல் தொடரில் இணையவிருப்பதோடு பங்களாதேஷின் மூன்று வீரர்களும் ஐ.பி.எல் தொடரில் இருமுறை இடைவெளி எடுத்துக் கொள்ளவுள்ளனர்.

இந்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க வீரர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கு தாமதிப்பது குறித்து இந்திய சபை அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல் ஏலத்தில் சில நாட்டு வீரர்களை வாங்க அணிகள் தயக்கம் காட்டும் என்று ஐ.பி.எல் அணியின் அதிகாரி ஒருவர் ‘இன்சைட்ஸ் போர்ட்ஸ்’ தளத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

## மகளிர் பிரீமியர் லீக்கில் மும்பை முதல் சம்பியன்



முதலாவது மகளிர் பிரீமியர் லீக் டி20 தொடரில் டெல்லி கெபிடல்ஸை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

மும்பையில் உள்ள பார்போர்ன் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களை பெற்றது. எனினும் இங்கிலாந்தின் நட் சிவர் புருன்ட் ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களை பெற மும்பை இந்தியன்ஸ் 19.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

# சர்வதேச செய்திகள்

## வெளிநாடுகளின் உதவியுடன் சிக்கிம் அபிவிருத்தி அடையும்

### சுற்றுலாத் தலமாக மாறும் என்கிறார் வர்த்தக செயலாளர்

காடும் மலையும் சார்ந்த வடகிழக்கு மாகாணமான சிக்கிமை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சிக்கிமின் வர்த்தக மற்றும் கைத்தொழில் செயலாளர் கர்மா ஆர்.பொன்போ தெரிவித்துள்ளார்.

தலைநகர் காங்டொக்கில் நடைபெற்ற ஜி20 வர்த்தக மாநாட்டின் பின்னர் ஊடகங்களுடன் உரையாடிய வர்த்தக மற்றும் கைத்தொழில் செயலாளர் காங்டொக் நகரங்களை சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளுடன் அபிவிருத்தி செய்ய அபுதாபி விருப்பம் தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

நகரங்களை அபிவிருத்தி செய்யும் போது கல்வி, மருத்துவமனை, ஹோட்டல்கள், பூங்காக்கள் போன்ற பல்வேறு வசதிகளும் அவற்றுள் அடங்குவதால் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் வந்துவிடும் என நம்புகிறோம். சிக்கிமில் மின்சக்தி வசதி முக்கியத் தேவையாக உள்ளதால் சிறிய நீர்மின்சாரத் திட்டங்களில் தனியார் முதலீடு செய்ய வேண்டும்.

## கொல்கத்தா ரயில் நிலையத்தில் வங்கதேச விசா அலுவலகம்

கொல்கத்தா ரயில் நிலையத்தில் வங்கதேசம் ஒரு விசா அலுவலகத்தை திறந்துள்ளது. கொல்கத்தாவில் இருந்து வங்கதேசம் பயணிக்கும் கடுகதி ரயில்களில் பயணிப்போரின் வசதிக்காக இவ்வலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாக வங்க தேசத்துக்கான பதில் தூதுவர் அந்தாலிப் இளையாஸ் தெரிவித்துள்ளார். இந்த அலுவலகத்தைத் திறந்துவைத்த போதே இதை அவர் தெரிவித்தார்.

வங்கதேசம் செல்ல விரும்பும் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரஜைகள் கொல்கத்தா ரயில் நிலையத்துக்கு அனுமதி சீட்டு வழங்க வரும் அதே சமயம் வங்கத்துக்கான விசா பெறும் தகவல்கள் மற்றும் விண்ணப்பங்களை இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு சுற்றுலா தொடர்பான தகவல்களையும் அறிந்துகொள்ள முடியும்.

கொல்கத்தா ரயில் நிலையம் ஒரு சர்வதேச ரயில் நிலையமாக அறியப்படுகிறது. இங்கிருந்து டாக்காவுக்கும் குல்னாவுக்கும் கடுகதி சேவைகள் இயக்கப்படுகின்றன.

## இஸ்ரேலிய அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்: பதற்றம்



இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, தனது பாதுகாப்பு அமைச்சரை பதவி விலக்கியதை அடுத்து இஸ்ரேல் எங்கும் பாரிய ஆர்ப்பட்டங்கள் வெடித்துள்ளன.

இஸ்ரேலின் சட்ட முறையை மாற்றி அமைக்கும் அரசின் சர்ச்சைக்குரிய திட்டத்திற்கு பாதுகாப்பு அமைச்சர் யோவ் களன்ஸ் எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்தே அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று (27) அதிகாலை நெதன்யாகுவின் வீட்டுக்கு அருகில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் மற்றும் படையினர் தண்ணீரை பீச்சியடித்தனர். இஸ்ரேலின் நிலை ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி இருப்பதாகவும் சமரசம் ஒன்றுக்கு வரும்படியும் அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

திட்டமிடப்பட்ட இந்த சட்டத்தை கொண்டுவருவதில் ஏற்கனவே ஒரு வார காலம் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த சீர்திருத்தத்தின்படி நீதிபதிகளை நியமிக்கும் குழு அரசின் முழு கட்டுப்பாட்டில் வரவுள்ளது.

அதேபோன்று பதவி வகிக்க தகுதியற்றவர் என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் தலைவரை பதவி நீக்குவது இந்த சட்ட சீர்திருத்தத்தில் கடுமையாக்கப்பட்டுள்ளது. இது பதவியிலுள்ள நெதன்யாகு முகம்கொடுத்திருக்கும் வழக்கு விசாரணையில் இருந்து தப்புவதற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக பரவலாக குற்றம்சாட்டப்படுகிறது.

இஸ்ரேலிய கொடிகளுடன் டெல் அவிவில் திரண்ட நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான நெடுஞ்சாலையை முடக்கியதோடு வீதியில் தீப்பந்தங்களையும் எரித்தனர். இதனை அடுத்து பொலிஸாருடன் மோதலும் ஏற்பட்டது.

இந்நிலையில் அரச பல்கலைக்கழகங்கள், தொழிலாளர் சங்கங்கள் மற்றும் வர்த்தகத் தலைவர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். நெதன்யாகு நாட்டில் இருந்து வெளியே இருக்கும் சந்தர்ப்பத்தில் கடந்த சனிக்கிழமை தொலைக்காட்சியில் பேசியபோதே களன்ஸ் இந்த சட்ட சீர்திருத்தத்தை எதிர்த்தார். இதனை அடுத்து பாதுகாப்பு அமைச்சராக அவர் மீதான நம்பிக்கை இழந்துவிட்டதாக நெதன்யாகு அறிவித்துள்ளார்.

## தாய்வானில் சீன ஊடுருவல் உச்சம்



தாய்வானைச் சூழ சீன இராணுவ விமானங்களதும் கடற்படை கப்பல்களதும் பிரசன்னம் அதிகரித்துள்ளதாக தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாதம் மாத்திரம் 292 இராணுவ விமானங்களதும் 76 கடற்படைக் கப்பல்களதும் பிரசன்னம் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

“தாய்வானைச் சூழ சீன விமானங்களதும் கடற்படைக் கப்பல்களதும் பிரசன்னங்களை அண்மைக் காலமாக அடிக்கடி அவதானிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் கூட 28 இராணுவ விமானங்களையும் 4 கடற்படை கப்பல்களையும் அவதானிக்க முடிந்தது. சில விமானங்கள் தாய்வான் வான் பரப்புக்குள்ளும் பிரவேசித்திருந்தன” என்றும் அது கூறியது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.